Registered as a News Paper in Sri lanka
விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 தை 29 செவ்வாய்க்கிழமை (11.02.2014) பக்கங்கள் 20 ஓசை - 133

## மன்னார் மனிதப் புதைகுழியில் நேற்றும் மூன்று மண்டை ஓடுகள் மீட்பு

(மன்னார்)

மன்னார், திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியில் இருந்து மேலும் 3 மண்டையோடுகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

நேற்று மீட்கப்பட்டுள்ள மண்டை ஓடுகளுடன் இதுவரையில் மொத்தமாக 57 மண்டையோடுகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டது.

மன்னார் - மாந்தை வீதியின் திருக்கேதீஸ்வரம் கோயிலுக்கு அருகில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி நீர்க்குழாய்களை பொருத்தும் பணிகளில் ஈடுபட்டிருந்தவர்களால் இந்த மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

மன்னார் நீதவானின் உத்தரவிற்கு அமைய, இதுவரை 20 நாட்கள் இந்த புதைகுழியில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(19) பக்கம் பார்க்க...

## முல்லையில் காணி பகிர்ந்தளிப்பு விளக்கம் கோருகிறது நீதிமன்றம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள அரச காடுகளை அழித்து அங்கு முஸ்லிம் மக்களை மீள்குடியமர்த்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள முடிவை இரத்து செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு தொடர்பில் விளக்கமளிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் அரசாங்கத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

முல்லைத்தீவுவாசிகள் சிலர் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தனர். முல்லைத்தீவு அரச காடு

(19) பக்கம் பார்க்க...

## நெடியவனின் சகா 'மணிமான்' கனடாவிலிருந்து நாடு கடத்தல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பின் நெடியவன் குழுவைச் சேர்ந்த 'மணிமான்' என அழைக்கப்படும் ஜெயக்குமார் முனீஸ்வரமூர்த்தி என்பவரை கனேடிய அரசாங்கம் இலங்கைக்கு நாடு கடத்தியுள்ளதாக 'நேசன்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு 7.00 மணிக்கு EY 140 என்ற விமானத்தில் நாடு கடத்தப்பட்ட இவர் கொழும்புக்கு நேற்று அதிகாலை 3.35 மணிக்கு வந்தாகவும், அவரை சி.ஐ.டி.யினர் கைது செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நாடு கடத்தப்பட்ட முனீஸ்வரமூர்த்தி , விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் ஆயுதக் கொள்வனவாளரான கே.பி.பத்மநாதனுக்கு நிகரா

(19) பக்கம் பார்க்க...

14
ஆர்ப்பாட்டம்



18
குளிர்காய...



# இந்திய மாநிலத்தை ஒத்த அதிகாரம்; சம்பந்தனின் யோசனைக்கு எதிர்ப்பு

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்தியாவில் இருக்கக்கூடிய மாநிலங்களின் அதிகாரங்களைத் தான் தமிழ்மக்களும் கோருகின்றார்கள் என்று தெரிவித்திருக்கும் கருத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முற்றாக நிராகரிப்பதாக அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொனனம்பலம் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.ஊடாக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் இந்தக் கூற்றை நிராகரித்துள்ளார்.

இந்தியாவுக்கு இருக்கின்ற அரசியல் அமைப்பின் பிரகாரம் இலங்கைத்தீவில் விசேடமாக தமிழருக்கு இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்பட வேண்டும் என்று தெரிவித்திருக்கின்றார். எங்களைப் பொறுத்த வரையில் இதனை நாங்கள் முற்று முழுதாக நிராகரிக்கிறோம் என்று தெரிவித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அதனை

(19) பக்கம் பார்க்க...




## சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கு ஏற்பாடு

### விபரம் சேகரிக்கிறது யாழ்.செயலகம்

(யாழ்ப்பாணம்)

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தலைமையில் யாழ். செயலகத்தில் காணி சம்பந்தமான அவசர கூட்டமொன்று நேற்று நடைபெற்றது.

நேற்று முற்பகல் 11.00 மணிக்கு யாழ்.அரச அதிபரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் அசோக பீரிஸ், பிரதேச செயலர்கள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் கலந்து கொண்டனர். இதன்போது அரசாங்கத்தின் தேவை கருதி சுவீ கரிக்கப் படவுள்ள தனியார் காணிகளுக்கான இழப்பீடுகள் வழங்கப்படுவதற்குரிய நிதிக் கோரிக்கைகள் குறித்த பட்டியல்களை பிரதேச செயலர்கள் எதிர்வரும் 22 ஆம் திக திக்கு இடையில் அமைச்சுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இவ்வாறான நடவடிக்கைகளை அமைச்சு மேற்

(19) பக்கம் பார்க்க...

## அமெரிக்க யோசனையை ஏற்றால்; புலிகளின் தலைமை தப்பியிருக்கும்

### இறுதிக்கட்ட யுத்தம் குறித்து சமரசிங்க

(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது கப்பலொன்றை அனுப்பி பொதுமக்களை மீட்பது குறித்து அமெரிக்கா தெரிவித்த யோசனைக்கு ஜனாதிபதி ஆதரவு வழங்கியிருந்தால் விடுதலைப் புலிகளின் தலைமை உறுப்பினர்கள் காப்பாற்றப்பட்டிருப்பதுடன், யுத்தத்தையும் விரைவில் நிறைவு செய்திருக்க முடியாதென அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மாத்தறை கொட்டுவேகொட பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மனிதாபிமான நடவடிக்கைகளின் இறுதிக் கட்டத்தின் போது சர்வதேசம் அதில் தலையிடுவதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது.

இலங்கையில் இருந்த சில தூதுவர்கள் பாரிய அழுத்தங்களை பிரயோகித்தனர்.

அப்போதிருந்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜனாதிபதியை சந்தித்து பொதுமக்களை காப்பாற்றுவதற்கு

(19) பக்கம் பார்க்க...

## விவசாயிகளுக்கு ஓய்வூதியம் கிளிநொச்சியில் நேற்று ஆரம்பம்



வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் விவசாய ஓய்வூதியம் பெற்று இடைநிறுத்தப்பட்ட 2,880 விவசாயிகளுக்கு மீளவும் ஓய்வூதியம் வழங்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விசேட கருத்திட்ட அமைச்சரும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பிரதியமைச்சருமான சந்திரசேன மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான வை.தவநாதன் மற்றும் தர்மபாலவும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்கினர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதியமைச்சர் சந்திரசேன,

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைவாக வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த விவசாயிகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவை நிதி அமைச்சின் அனுசரணையுடன் விவசாய காப்புறுதித்

(19) பக்கம் பார்க்க...

## ஜெனிவாத் தீர்மானம் தோற்றுப் போக வாய்ப்பு

### தயான் ஜெயதிலக தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் முக்கிய உறுப்பு நாடுகள் இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவிக்க மறுத்து வருவதால் மேற்படி தீர்மானம் தோற்றுப் போகும் சாத்தியம் இப்போது காணப்படுவதாக சிரேஷ்ட இராஜதந்திரி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார். இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தீமானம் நிறைவேற்ற உள்ளன. மூன்றாம் தடவையாக நிறைவேற்றப்பட உள்ள இந்தத் தீர்மானத்திற்கு பாரியளவில் ஆதரவு கிடையாது எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான ஆதரவு நாடுகளை விடவும் சொற்ப அளவிலான நாடுகளே தீர்மா

(19) பக்கம் பார்க்க...

# குடிநீர் விநியோகம் நிறுத்தம்; பொன்னகர் மக்கள் அலைச்சல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொன்னகர் கிராமத்திற்கு மேற்கொள்ளப்பட்டு வந்த குடிநீர் விநியோகத்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளமையால் இங்கு வாழ்கின்ற 72 குடும்பங்கள் தமது குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பொன்னகர் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்திய வீட்டுத்திட்டத்தில் வாழ்ந்து வருகின்ற 72 குடும்பங்களிற்கும் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையினால் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

தற்போது குடிநீர் விநியோகம் நிறுத்தப்பட்ட நிலையில் இப்பகுதி மக்கள் குடிநீருக்கு அலைகின்ற அவல நிலை காணப்படுகின்றது. அத்துடன் இக்கிராமத்திற்கு செல்கின்ற குடியிருப்பு வீதிகளை குறுக்கறுத்துச் செல்கின்ற புகையிரத வீதி உரிய முறையில் புனரமைக்கப்படாமையினால் இதன் ஊடாக பயணிப்பதில் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக கரைச்சிப் பிரதேச சபையிடம் தொடர்பு கொண்ட போது குடிநீர் விநியோகம் மேற்படி கிராமத்துக்கு மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் பவுசர் பழுதடைந்தமையினால் நிறுத்தப்பட்டதாகவும் தற்போது விரைவாக வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் இ.கிருஸ்ணகுமார் தெரிவித்துள்ளார். (கே)

# மாற்றுவலுவுள்ளோருக்கான தொழிற்பயிற்சி விண்ணப்பம்

(திருநெல்வேலி)

கொக்குவில், கருவேலடி ஒழுங்கையில் அமைந்துள்ள பெதஸ்டா நிறுவனத்தில் மாற்றுவலுவுள்ளோர் மற்றும் கணவனை இழந்த பெண்களுக்கான மென்பொருள் பயிற்சி இடம்பெற்றது. இப்பயிற்சியுடன் தையல் பயிற்சியும் நடைபெற்றது.

முதலாவது கட்ட பயிற்சியில் பல பெண்கள் பங்குகொண்டு பயன்பெற்றனர். இரண்டாவது பயிற்சிக்கான பதிவுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னதாக இப்பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகளில் மாற்றுவலுவுள்ளோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சியைப் பெற்றுக் கொண்டோர் தமது வாழ்வாதாரத்தை தாமே சுயமாக நடத்தக் கூடிய வருமானத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என இந்நிறுவனத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சியின்போது உருவாக்கப்பட்ட மென்பொருட்கள் உள்ளூரில் விற்பனை செய்யப்படுவதுடன், வெளிநாடுகளுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

மிகவும் அழகாகவும் தரமாகவும் காணப்படும் இம்மென்பொருட்களின் உற்பத்திக்கான செலவுகளை பெதஸ்டா நிறுவனமே பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. (137)

# இடமாற்றப்பட்டது இலங்கை வங்கிக் கிளை

திருநெல்வேலியில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையானது நேற்று தொடக்கம் இல 102, பலாலி வீதி, திருநெல்வேலி என்ற முகவரிக்கு இடமாற்றப்பட்டுள்ளதாக வங்கி வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறிவித்துள்ளனர்.

எனவே வாடிக்கையாளர்கள் அனைவரும் மேற்படி முகவரியிலுள்ள இலங்கை வங்கிக் கிளைக்கு வந்து தமது வங்கிச் சேவையினைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (85)

# நில அளவையாளர் அலுவலகம் யாழில் நிரந்தர இடத்தில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பழைய பூங்கா வளாகத்தில் 25 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள யாழ். மாவட்ட நில அளவையாளர் அலுவலகத்தை காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன் நேற்று வைபவரீதியாக திறந்து வைத்தார்.

நேற்று மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்ற திறப்பு விழா நிகழ்விற்கு அமைச்சருடன் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் அசோக பீரிஸ், காணி ஆணையாளர் நாயகம் க.தவலிங்கம், நில அளவையாளர் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோர் அதிதிகளாக கலந்துகொணடனர்.

அதிதிகளின் வரவேற்பு நிகழ்வைத் தொடர்ந்து அலுவலகத்தின் பெயர்ப்பலகையைத் திரை நீக்கம் செய்துவைத்த அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன அலுவலகத்தை நாடா வெட்டித் திறந்துவைத்தார். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வில் அமைச்சரின் சிறப்புரையும் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த வருடம் இவ்வாறான ஒரு அலுவலகம் அமைச்சரால் திறந்துவைக்கப்பட்டுள்ளதுடன், மன்னார், முல்லைத்தீவிலும் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்ட அலுவலகம் ஏற்கனவே நீண்டகாலமாக தனியார் கட்டடத்தில் இயங்கி வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (பா)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள நடேஸ்வராக் கல்லூரியின வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் பாடசாலை விளையாட்டு மைதனாத்தில் இன்று பி.ப. 1.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் பொ.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுலகுமரன், சிறப்பு விருந்தினராக யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளரும் கல்லூரியின் பழைய மாணவனுமாகிய மு.கௌசிகாந்தன், கௌரவ விருந்தினராக ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகரும் கல்லூரியின் பழைய மாணவனுமாகிய வ.முருகேசு ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (06)




# வடக்கிலுள்ள அரச பாடசாலைகளில்

# 5603 பட்டதாரி ஆசிரியர்கள் கடமையில்

## கல்வி அமைச்சின் புள்ளி விபரத்தகவல் சுட்டிக்காட்டு

நாட்டிலுள்ள அரச பாடசாலைகளில் 86 ஆயிரத்து 751 பட்டதாரி ஆசிரியர்கள் கடமையாற்றுவதாகவும் இதில் வடமாகாணத்தில் 5603 பட்டதாரி ஆசிரியர்கள் கடமையாற்றுவதாக கல்வி அமைச்சின் புள்ளி விபர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வடமாகாணத்தில் மாவட்ட ரீதியாக யாழ். மாவட்டத்தில் 3430, கிளிநொச்சி மாவட்டத்தில் 576 பட்டதாரிகளும், மன்னார் மாவட்டத்தில் 470 பட்டதாரி களும் வவுனியா மாவட்டத்தில் 693 பட்டதாரிகளும் முல்லைத் தீவு மாவட்டத்தில் 434 பட்டதாரிகளும் கடமையாற்றி வருவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் மாகாண ரீதியாக வடமத்திய மாகாணத்தில் 5021 பட்டதாரிகளும், வடமேல் மாகாணத்தில் 11 ஆயிரத்து 173 பட்டதாரிகளும், கிழக்கு மாகாணத்தில் 6511 பட்டதாரிகளும், மேல் மாகாணத்தில் 20 ஆயிரத்து 572 பட்டதாரிகளும், தென்மாகாணத்தில் 11 ஆயிரத்து 799 பட்டதாரிகளும், சப்ரகமுவா மாகாணத்தில் 12 ஆயிரத்து 893 பட்டதாரிகளும், ஊவாமாகாணத்தில் 2455 பட்டதாரிகளும், மத்திய மாகாணத்தில் 10724 பட்டதாரிகளும் கடமையாற்றிவருகின்றனர்.

நாட்டில் மொத்தமாக 2 இலட்சத்து 23 ஆயிரத்து 333 பேர் கடமையாற்றுகின்றனர். இவர்களில் 86 ஆயிரத்து 751 பேர் பட்டதாரி ஆசிரியர்களாகவும் 1 இலட்சத்து 28 ஆயிரத்து 152 பேர் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாகவும் 5 ஆயிரத்து 833 பேர் பயிற்றப்படாத ஆசிரியர்களாகவும், 2 ஆயிரத்து 597 பேர் ஆசிரியர் பயிலுநர்களாகவும் இருப்பதாக புள்ளி விபர அறிக்கை தெரிவித்துள்ளது.

# எண்ணெய்காப்பு சாத்தல்

நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகத்தையொட்டி இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரையான காலத்தில் அம்மனுக்கு எண்ணெய்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

இன்றைய வரலாற்று சிறப்பு நிகழ்வில் தீவுதழுவிய ரீதியில் உள்ள அம்மன் அடியார்களை கலந்து சிறப்பிக்கும் வண்ணம் ஆலய பிரதம குரு சிவத்திரு கந்தையா நாகேந்திரம் கேட்டுள்ளார். மக்கள் அள்ளிவாரிய நிதிப்பங்களிப்பினால் களையோடை கண்ணகை அம்மன் புதுப்பொலிவு பெற்றுள்ளாள்.

இயற்கை எழிலில் அமைந்துள்ள கண்ணகை அம்மனுக்கு நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் 10.15 மணிவரையான சுபமுகூர்த்த வேளையில் பெருஞ்சாந்தி எனப்போற்றும் மகாகும்பாபிஷேகம் இடம்பெறும். கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 13 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும்.

# பப்பாசிச் செய்கையை ஊக்குவிக்க 100 பயனாளிகள் தெரிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் பப்பாசிச் செய்கைக்கென 100 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குரிய பப்பாசிக் கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பழப்பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் பப்பாசிச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் ஐஓஎல் திட்டத்தின் கீழ் 100 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒரு பயனாளிக்கு 170 கன்றுகள் வீதம் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறித்த ஐஓஎல் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாய திணைக்களத்தினால் (விரிவாக்க) மேற்படி செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதில் 100 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கடந்த 31ஆம் திகதி 1500 கன்றுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய கன்றுகள் பெப்ரவரி மாதத்திற்குள் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட விவசாய பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்துள்ளார். (கே)

# வளர்மதி சனசமூக நிலையத்தால் பொதுமண்டபம் புனரமைப்பு

(கைதடி)

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் ஒழுங்குபடுத்தலில் இராஜபுரியில் அமைந்துள்ள பொதுமண்டபம் மக்கள் பாவனைக்கு பயன்படுத்தும்முகமாக புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இப்பிரதேசத்தின் புலம்பெயர் வாழ் அன்பர்களின் நிதியுதவியுடன் இப்புனரமைப்பு பணிகள் இடம்பெற்ற வருவதாக நிலையத்தின் தலைவர் சி.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

இப்பிரதேச மக்களின் தேவையை கருத்தில் கொண்டே இம்மண்டபம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இதைவிட இச்சனசமூக நிலையத்தினால் வீதிப்புனரமைப்பு, மின் விநியோகம் என்பனவும் பின்தங்கிய கிராம மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் நிலையத்தலைவர் தெரிவித்தார். (51)

# நகுலேஸ்வர ஆலய மகோற்சவம் விசேடபேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கீரிமலை நகுலேஸ்வரர் கோவிலின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு விசேட பேருந்து சேவை மேற்கொள்ளப்படவுள்ளது.

மேற்படி கோவிலின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 14ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 28ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டே மேற்படி விசேட பேருந்து சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெல்லிப்பளை பிரதேச செயலர் கே.ஸ்ரீமோகனன் தெரிவித்தார்.

தற்போது காங்கேசன்துறை வீதி வழியாக மாவிட்டபுரம் வரை சேவையில் ஈடுபடும் தனியார் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகள் 14ஆம் திகதியிலிருந்து கீரிமலை நகுலேஸ்வரம்வரை செல்லுமெனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் பிரதேச செயலகத்தில் கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (48)



கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தினால் முன்னெடுக்கப்படும் வீடமைப்புத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது... (51)




# மக்களை அரசிலிருந்து தூர விலக்கி வைக்கும் நடவடிக்கை

நாடு முழுவதிலும் இராணுவத்துக்குத் தேவையான நிலங்களைப் பெறும் முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக வடக்குக் கிழக்கில் இது சற்றுத் தீவிரப் படுத்தப்பட்டிருக்கிறது.

நிலையான காணிகளையும் கட்டடங்களையும் படைத்தரப்புக்குப் பெற்றுக்கொள்வது இதன் நோக்கம்.

இதற்காக படையினர் குறிப்பிட்ட பிரதேசங்களில் தாம் சுவீகரிக்கவுள்ள காணிகள் மற்றும் சொத்துகளைப் பற்றிய பகிரங்கப் பிரகடனங்களைச் செய்திருக்கின்றனர்.

இதில் பொது மக்களின் சொத்துகளும் உண்டு. புலிகளின் உடமைகளும் உண்டு. நிறுவனங்களின் சொத்துகளும் உண்டு.

இந்தச் சுவீகரிப்பு அறிவித்தல்கள் சட்டரீதியாக பிரதேச செயலகங்கள் வழியாகவும் பத்திரிகை மூலமாகவும் பகிரங்கப்படுத்தப்படுகின்றன.

இதன் பொருள் என்னவெனில், சட்டரீதியாக இந்தச் சொத்துகளை படையினர் தமக்கென ஆக்கிக் கொள்கிறார்கள் என்பதே.

படையினரின் இந்த அறிவிப்புகளைப் பார்த்த பொது மக்களில் சிலர் தமது ஆட்சேபனைகளைத் தெரிவித்துள்ளனர். அதன்படி அவர்கள் தமது காணிக்கான அல்லது சொத்துக்கான உரித்து ஆவணங்களை பிரதேச செயலர்களிடம் கொடுத்து தமது உரித்தை வெளிப்படுத்தியுள்ளனர். அதேவேளை காணிகளையோ சொத்துகளையோ படைத்தரப்பு அல்லது பாதுகாப்பு அமைச்சு சுவீகரிப்பதை எதிர்த்துள்ளனர்.

ஆனால், இது மிகக் குறைந்த அளவிலேயே நடக்கின்றது.

மற்றும்படி ஏராளமான சொத்துகளும் காணிகளும் படையினர் வசமாகும் நிலையே காணப்படுகிறது.

குறிப்பாக வெளிநாடுகளில் இருப்போரின் காணிகள் மற்றும் புலிகளின் நிர்வாக மையங்கள் இருந்த காணிகள் மற்றும் அரச திணைக்களங்களுக்குச் சொந்தமான காணிகள் எனப் பெருமளவு காணிகள் படைத்தரப்பின் வசமாகக் கூடும்.

யுத்தம் முடிந்த பின்னர் படையினரின் தேவை இல்லை என்று நாம் கருதிக்கொண்டிருக்கிறோம். அதன்படி படையினர் பொது இடங்களில் இருந்தும் மக்கள் நடமாட்டப்பகுதிகளிலிருந்தும் வெளியேறி ஒதுங்கி விட வேண்டும் என்று எண்ணுகிறோம்.

ஆனால், படையினரோ பாதுகாப்பு அமைச்சோ அரசாங்கமோ அப்படிச் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

அவர்களைப் பொறுத்தவரை படைத்தரப்பு எப்போதும் பலமாகவும் உஷாராகவும் இருக்க வேண்டும் என்று விரும்புவதாகவே தெரிகிறது.

நவீன இலங்கையின் வரலாறு படைகளை மையப்படுத்தியே அமைந்துள்ளது. 1505 இல் இலங்கையின் மீது ஆக்கிரமிப்பைச் செய்த ஐரோப்பியர்கள் தொடக்கம் இன்றைய சுதேச ஆட்சியாளர்கள் வரையில் படைத்தரப்பை முன்னிறுத்தியே ஆட்சி நடத்தி வந்துள்ளனர். இன்னும் அப்படியே ஆட்சி செய்கின்றனர்.

முன்னர் போர்த்துக்கீசரின், ஒல்லாந்தரின், பிரிட்டிஷ்காரரின் கோட்டைகள் இலங்கையின் கேந்திர நிலையங்களில் இருந்தன. அந்தக் கோட்டைகளிலேயே அவர்களுடைய நிர்வாக பரிபாலனங்களும் நடந்தன.

ஏறக்குறைய இந்த வழியையே சுதந்திரத்தின் பின்னரான ஆட்சியாளர்களும் கடைப்பிடித்து வருகிறார்கள்.

1970 களில் அரசுக்கு எதிராக நடந்த ஜே.வி.பி கிளர்ச்சியை அடக்குவதற்காக வளர்க்கப்படத் தொடங்கிய இராணுவ இயந்திரம் இப்பொழுது இலங்கையின் பொருளாதாரத்தில் மூன்றில் ஒரு பங்கை எடுக்கும் அளவுக்கு பிரமாண்டமான அமைப்பாக மாறியுள்ளது.

இலங்கையின் இராணுவப் பலமாக்கல் என்பது அதன் உள்நாட்டு அரசியல் நெருக்கடிகளையும் மக்கள் போராட்டங்களையும் ஒடுக்குவதற்கே பயன்பட்டு வந்திருக்கிறது. எதிர்காலத்திலும் இதுதான் நடக்கப்போகிறது. அந்த நோக்கத்தோடுதான் இராணுவத்தைப் பலப்படுத்தும் எண்ணங்கள் தென்படுகின்றன.

இது சுத்தமான முட்டாள்தனமாகும்.

அத்துடன் மக்களை அரசிலிருந்து தூர விலக்கி வைக்கும் ஒரு நடவடிக்கையுமாகும்.

படைத்தரப்பு மக்கள் வாழிடங்களில் அமையும்தோறும் அரசின் பலவீனமே வெளிப்படும். மட்டுமல்ல, நாட்டின் சிவில் தன்மை கெட்டுப்போய், இராணுவத்தன்மையே மேலோங்கும்.

இதற்கு நல்ல உதாரணம், வடக்குக் கிழக்கில் கடந்த காலங்களில் நடந்த தேர்தல்களில் இராணுவப்பிரசன்னம் அதிகரித்திருந்ததும் அது அரசாங்கத்துக்கு எதிரான விளைவுகளை உண்டாக்கியதும்.

ஆகவே படைத்தரப்பை பலப்படுத்துவதை விடுத்து, அதற்குத் தீனி போடுவதை விடுத்து, அதில் நிரந்தரமாகத் தங்கியிருப்பதை விடுத்து, அரசியல் பொருளாதார மாற்றங்களை அரசாங்கம் செய்ய வேண்டும்.

உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதைப் பற்றிச் சிந்திப்பதற்குப் பதிலாக ஒருவரை நோயாளியாக்கி விட்டு சிகிச்சை செய்வதற்கு செலவழிக்கும் வழிமுறையைக் கடைப்பிடிக்கின்றனர் இலங்கையின் ஆட்சியாளர்கள்.

சாதனைகள் செய்துதான் மனத்தை தூயதாக்க முடியும். இறைவன் தூய வடிவினர். ஆதலால் சாதனைகளின்றி அவரைக் காண முடியாது. - *சாரதாதேவியார்.*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## நம்மைப் பின்னோக்கித் தள்ளுபவர்கள்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னோடிகளிடம் தொடங்கி, 60 வருடங்களுக்கும் மேலாக பெரும்பான்மையான தமிழர்கள் இவர்களிடமே தங்களின் அரசியல் அபிலாசைகளை ஒப்படைத்து விட்டு, விடிவு வருமா? என்று காத்திருக்கும் வரலாறு தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

ஒவ்வொரு காலகட்டத்திலும் பாராளுமன்ற நாற்காலிகளை நிரப்புவதற்காக தமிழ் மக்களிடம் 'ஆணை' கேட்டுக் கொண்டு தேர்தலில் குதிப்பது இந்தத் தமிழ்த் தலைமைகளின் வழமையாகி விட்டது. தமிழ் மக்களும் தமது பெரும்பான்மையான வாக்குகளை இவர்களுக்கே அளித்து ஆணையை வழங்குவர்.

இவர்கள் ஆணையைப் பெற்றுக் கொண்டு "அரசாங்கம் தீர்வைத் தர மறுக்கிறது, ஆமியைத் திருப்பியழைக்க மறுக்கிறது, காணிகளைத் திருப்பித் தர மறுக்கிறது" என்று ஒரேவிதமான மறுப்புப் புராணங்களையே அடுத்தடுத்த தேர்தலுக்கும் எடுத்துச் சென்று மீண்டும் ஆணை கேட்டு கதிரைகளில் போய்க் குந்துவதே தொடர் வரலாறாகிவிட்டது.

அரசியற் தீர்வு கிடைத்து விட்டால், அடுத்த தேர்தலுக்கு ஆணை கேட்க விஷயமின்றிப் போய்விடுமே என்ற பயத்தில், தீர்வு ஒரு மாமாங்கத்திற்கும் வரமுடியாதபடி குழப்பிவிடுவதற்கான திட்டங்களும் அவர்களுக்கு அத்துபடி. சமீபத்திய உதாரணம் வடமாகாண சபை நிறைவேற்றிய தீர்மானம்.

இந்த அதிகாரம் குறைந்த மாகாண சபையையே இவர்களிடம் கொடுத்தது பெரும்பிழையாகத் தெரிகிறதே என்று கோபம் கொண்டு சிங்கள இனவாத சக்திகளும் இவர்களுக்குச் சமதையாக அந்தப்பக்கம் பொங்கவேண்டும் என்பதே இவர்களது எதிர்பார்ப்பு. அதுதான் நிறைவேறியிருக்கிறது.

"இனி என்ன, யார் நினைத்தாலும் நமது அந்தப்பக்க சகபாடிகளான சிங்கள இனவாத சக்திகள் தீர்வுப் பேச்சை எடுக்கவே விடமாட்டார்கள். மாகாண சபையையும் கலை என்று அரசுக்கு அழுத்தம் கொடுப்பார்கள். அதைக் காட்டி இங்கே தமிழர்களின் இனவாத உணர்வையும் தட்டியெழுப்பி விட்டால், அடுத்த தேர்தலுக்கும் அள்ளுகொள்ளை வாக்குகளுக்குப் பிரச்சினையில்லை."

தமிழ் மக்களும் தேர்தல் என்று வந்தவுடன் நித்திரையால் எழும்பினாலும் விழிக்காமலே போய் பாழ் கிணற்றில் விழுபவனைப் போல, தமது தேசியக் கடமையை நிறைவேற்றிவிட்டு, அரசுக்கு ஆவேசச் சவால் விடும் இவர்களது "வீரம்" தமிழன் தலை நிமிர்ந்து நிற்கப் போதும் என்று திருப்தியடைந்து விடுவார்கள்.

இப்படித்தான் கண்மூடித்தனமாகத் தலைநிமிர்ந்தபடி போய் முள்ளிவாய்க்காலில் அவலப்பட நேர்ந்தது என்பதை அறிந்திருந்தாலும் அந்த அனுபவங்களை விரைவாகவே மறந்து மீண்டும் ஒரு முள்ளிவாய்க்காலை நோக்கி அழைத்துச் செல்லும் அடுத்த கட்டப் போராட்டக்காரர்களுக்கும் நாங்கள் ஆதரவு தரத் தயார் என்று படு விறைப்பாகவே இருப்பதாகக் காட்டிக் கொள்கிறார்கள்.

இந்த ஏமாளித்தனத்தை நன்கு புரிந்து வைத்திருக்கும் கூட்டமைப்புக்காரர்களுக்கு பாராளுமன்றக் கதிரைகள் பரம்பரைச் சொத்தாகிவிட்டது. வாரிசு அரசியலும் தொடருது. தமது பெண்டிர், பிள்ளைகளை பணக்கார வெளிநாடுகளிலும், கறுவாக்காட்டிலும் சுகமாக வாழவைத்துக் கொள்கின்றனர்.

அதற்குத் தேவையான உதவிகளையும், சலுகைகளையும் ஆட்சியில் இருக்கும் அமைச்சர்களையும், அதிகாரிகளையும் பின் கதவால் சென்று சந்தித்து எந்த வெட்கமுமில்லாமல் பெற்றுக் கொள்கின்றனர்.

இப்படியான தலைமையினால் தமிழ் மக்களுக்கு எந்த பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை. இவர்களின் அறிவும், புலமையும் ஒடுக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களின் நலன்களுக்கு ஒருபோதும் பயன்படப் போவதில்லை. இதற்கு முற்றுப்புள்ளி வைக்காவிட்டால், அது தமிழ் மக்களின் எதிர்காலத்தை இன்னுமொரு நூறு வருடகாலத்துக்கு பின்தள்ளிவிடும். - ஆசிரியர்.

# மக்களின் சுதந்திரத்தில் தலையிட எந்தவொரு நாட்டுக்கும் தகுதியில்லை

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த நாட்டு மக்களின் சுதந்திரத்தில் தலையிட எந்தவொரு நாட்டுக்கும் தகுதியில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தல்களுக்காக ஆளும் கூட்டமைப்பு சார்பாக கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் இரு மாகாண சபைத் தேர்தல்களின் பெறுபேறுகள் உள்ளூர் அரசியலிலும், வெளிநாட்டிலும் முக்கியம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது.

இந்த மகிழ்ச்சியும், சுதந்திரமும் கொண்டதாக இருப்பதற்கான முக்கியமான காரணம், கடந்த நான்கு வருட காலப் பகுதியினுள், நாட்டின் சகல பகுதிகளிலும், அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுவதாகும். கடந்த 30 வருடங்களுக்குப் பின்னர் நாம் எதிர்பார்ப்பது மக்களின் மேம்பாடு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை வழங்குவதாகும்.

சுதந்திரமான நாடாக செயற்படும் இலங்கையில் நாம் சுதந்திரமான தீர்மானங்களை எடுக்க மக்களுக்கு உரிமையுள்ளது. அந்த உரிமையில் தலையிட எந்த நாட்டிற்கோ அல்லது எந்தவொரு அமைப்பிற்கோ தகுதியில்லை. எனவே, அதனை வெளிப்படுத்த நாம் இந்த தேர்தலின் பெறுபேறுகள் மூலம் வெளிப்படுத்த வேண்டும் என்றார்.

# உள்ளூராட்சி மன்றங்களின் அர்ப்பணிப்பு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு உதவும்

## கூறுகிறார் அமைச்சர் அதாவுல்லா

(கொழும்பு)

நாட்டைக் கட்டியெழுப்ப உள்ளூராட்சி மன்றங்களின் அர்ப்பணிப்பு மிகவும் முக்கியமானதாகும் என உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் மேற்கொள்ளப்படும் புறநெகும செயற்திட்டத்தின் கீழ் பதுளை மாவட்டத்திலுள்ள ஹப்புத்தளை பிரதேச சபையின் நிர்வாக கட்டடத்திற்கான அடிக்கல் அமைச்சர் அதாஉல்லாவினால் அண்மையில் நடப்பட்டது. இதில் அவர் மேலும் உரையாற்றுகையில், இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கிராமத்தைக் கட்டியெழுப்ப மிகவும் முனைப்புடன் செயற்படுகின்றார். எனவே சகல உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் அனைவரும் உள்ளூராட்சி மன்றங்களைப் பலப்படுத்த முன்வர வேண்டும்.

உள்ளூராட்சித்துறையில் பலதரப்பட்ட அபிவிருத்திகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் நோக்கம் உள்ளூராட்சி சபைகள் ஊடாக மக்கள் சிறந்த சேவையைப் பெற்றுக் கொள்வதேயாகும்.

கிராமத்தை கட்டியெழுப்புவதன் மூலமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்ற எண்ணக்கருவிற்கு அமைவாகவே புறநெகும திட்டம் எனது அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டது. இன்று வருமானம் குறைந்த 110 சபைகளை இனங்கண்டு ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் அவற்றிற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏனைய அபிவிருத்திப் பணிகளையும் எனது அமைச்சு மேற்கொண்டு வருகின்றது என்றார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் உதித் லொக்கு பண்டார, ஊவா மாகாண சபை உறுப்பினர் சுமித் சமயதாச, ஹப்புத்தளை பிரதேச சபைத் தவிசாளர் சமந்தகுமார, உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ. அப்துல் மஜீத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். வருமானம் குறைந்த உள்ளூராட்சி மன்றங்களில் 25ஆவது இடத்திலுள்ள ஹப்புத்தளை பிரதேச சபைக்கு இத்திட்டதிற்காக 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிர்வாக கட்டடத்தின் வேலைத்திட்டம் 2015 ஏப்ரல் மாதம் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தெரிவுக்குழுவில் இணைந்துகொண்டு கூட்டமைப்பு யோசனைகளை முன்வைக்கலாம்

## அமைச்சர் பசில் அழைப்பு

தமிழ்க் கூட்டமைப்பினர் முன் நிபந்தனை விதிக்காமல் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வரவேண்டும் என்று அமைச்சர் பசில் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியாவில் உள்ள மாநிலங்களுக்கு எவ்வாறான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதோ அது போன்ற அதிகாரங்களையே இலங்கையிலும் எதிர்பார்க்கிறோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இந்தியாவில் தெரிவித்துள்ளமை குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவில் உள்ள மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் போன்றே இலங்கைக்கும் கோருவதாக கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார். அதேபோன்று நாட்டில் ஒவ்வொரு அரசியல் கட்சியும் வெவ்வேறு விதமான யோசனைகளை அரசியல் தீர்வுத்திட்டத்துக்காக முன்வைத்துவருகின்றன.

எனவே அனைத்து கோரிக்கைகள் மற்றும் யோசனைகள் தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிலேயே கலந்துரையாடி தீர்மானம் ஒன்றை எடுக்க முடியும்.

எனவே தமிழ்க் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இணைந்துகொண்டு தமது நிலைப்பாட்டையும் யோசனையையும் முன்வைக்க முடியும்.

குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தமக்குத் தேவையான அதிகாரங்கள் தொடர்பில் வெளியில் இருந்து கூறிக் கொண்டிருப்பதைவிட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வந்து கூறுவதே பொருத்தமானதாக அமையும்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு முன் நிபந்தனை விதிக்காமல் வரவேண்டும். முன்நிபந்தனைகளை விதிப்பதானது அனைத்து செயற்பாடுகளிலும் சிக்கலை ஏற்படுத்திவிடும் என்றார்.

# போதைப்பொருள் குற்றவாளிகளை தூக்கிலிட வேண்டும்

## அமைச்சர் வீரவன்ச கோரிக்கை

போதைப்பொருள் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை தூக்கிலிடுமாறு வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச கோரிக்கை விடுத்துள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. கொழும்பு கொம்பனித்தெருவில நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஹெரோயின் போதைப் பொருள் அபாயத்தை இல்லாதொழிப்பதற்கு மரண தண்டனையை அமுல்படுத்த வேண்டும். கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப்படாவிட்டால் போதைப்பொருள் ஒழிப்பை அமுல்படுத்த முடியாது. போதை ஒழிப்பை கடந்த கால அரசாங்கங்கள் உரிய முறையில் தடுத்து நிறுத்தத் தவறியமையே இன்றைய ஆபத்தான நிலைமைக்கு காரணம் ஆகும். கொழும்பு நகர மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் அரசாங்கத்தின் முயற்சிகளை சில போதைப்பொருள் வர்த்தகர்கள் தடுத்து நிறுத்த முயற்சித்து வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இராணுவத்தை வெளியேற்ற வேண்டும்?

# ஓர் உரையாடல்... 3

## யோகா-ராஜன் கட்டுரையிலிருந்து

**சுதந்திரத்துக்குப் பின் இலங்கைச் சமூகம் ஒரு ராணுவச் சமூகமாகவே வளர்ச்சியடைந்து வந்திருக்கு! ஒன்று, இரு தடவைகள் நடந்து முடிந்த ஜே.வி.பி. கிளர்ச்சி! இரண்டாவது, இலங்கை ராணுவத்தை பலப்படுத்திப் பலப்படுத்தி வளர்த்ததில் தமிழர் போராட்டத்துக்குப் பாரிய பங்குண்டு! மொத்தத்தில் இலங்கை ராணுவத்தை மிகப் பலம்வாய்ந்த ஒரு சக்தியாக வளர்த்தெடுத்ததில் இலங்கைவாழ் ஒட்டுமொத்தச் சமூகத்துக்கும் முழுப் பங்குண்டு! வன்முறைப் போராட்டங்களை முன்னெடுத்ததன் மூலம் அரச வன்முறை யந்திரத்தை வளர்த்து விட்டாச்சு!**

**யோகா:** நான் பார்த்தவரை இண்டைக்கு ராணுவம் முகாமுக்குள் முடங்கிவிட்டதாகக் கூறுவதற்கில்லை! அப்படி வெளியில் திரிவதென்றால் கூட அதற்கான ஒரு வரையறை வேணும். அந்த வரையறையை யார் தீர்மானிப்பது? அதைத் தீர்மானிப்பதற்கு அரசுக்கு பலம் இருக்கிறதென்று நினைக்கிறீர்களா?

**ராஜன்:** மாஸ்ரர்... இது ஒரு நல்ல கேள்வி! சுதந்திரத்துக்குப் பின் இலங்கைச் சமூகம் ஒரு ராணுவச் சமூகமாகவே வளர்ச்சியடைந்து வந்திருக்கு! ஒன்று, இரு தடவைகள் நடந்து முடிந்த ஜே.வி.பி. கிளர்ச்சி! இரண்டாவது, இலங்கை ராணுவத்தை பலப்படுத்திப் பலப்படுத்தி வளர்த்ததில் தமிழர் போராட்டத்துக்குப் பாரிய பங்குண்டு! மொத்தத்தில் இலங்கை ராணுவத்தை மிகப் பலம்வாய்ந்த ஒரு சக்தியாக வளர்த்தெடுத்ததில் இலங்கைவாழ் ஒட்டுமொத்தச் சமூகத்துக்கும் முழுப் பங்குண்டு! வன்முறைப் போராட்டங்களை முன்னெடுத்ததன் மூலம் அரச வன்முறை யந்திரத்தை வளர்த்து விட்டாச்சு!

ஆரம்ப காலங்களில் ராணுவம் றக் வண்டிகளில் ஆயுதங்கள் இன்றி பலாலி நோக்கிச் சென்றதை நான் மட்டுமல்ல நீங்களும் பார்த்திருப்பீர்கள்! இன்று இந்த ராணுவம் மிகப் பிரமாண்டமாக வளர்ச்சியடைந்து,மிகப் பெரிய வெற்றிகளுக்கூடாக இந்த நாட்டுக்கே மிகப்பெரும் சக்தியாக தங்களை நிலைநாட்டிக் காட்டியிருக்கிறது! குறிப்பாக புலிகளை வெற்றி கொண்டதன் மூலம்! இந்த நாட்டில் சிவில் சமூகச் செயற்பாடுகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு,தங்களை பெரும் தலைவர்களாகக் காட்டியிருக்கிறது!

இதன் வெளிப்பாடாக இவர்கள் சிவில் சமூகச் செயற்பாடுகளில் இருந்து பின்நோக்கிச் செல்வதற்கு குறிப்பிட்ட காலம் எடுக்கும்! உண்மையில் இது எமக்குமட்டும் உள்ள பிரச்சினையல்ல! பெரும்பான்மைச் சமூகத்துக்கும் உள்ள பிரச்சினைதான்! அரசை வழிநடத்தும் முப்படைகளையும் வழிநடத்திச் செல்லும் கட்டளைத்தளபதியாக இருக்கக் கூடிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, பசில் ராஜபக்ச ஆகியோருக்கும் கோத்தாபய ,ராஜபக்சவுக்கும் இடையில் இருக்கக்கூடிய பிரச்சினை!

இந்த நிலையில் யுத்தம் முடிந்த பின் மேலும் மூன்றுலட்சம் ராணுவத்தின் தேவையை வலியுறுத்திய சரத் பொன்சேகாவை ஜனாதிபதியாக்குவதற்கு வாக்களிக்கக் கோரிய தமிழ் தலைமைகளை நினைத்து ஆத்திரப்படுவதா? அல்லது அவர்களின் - அரசியல் பொறிமுறையின் அரிச்சுவடியைக்கூடத் தாண்டாத - அவர்களின் முட்டாள்தனத்தை நினைத்து சிரிப்பதா என்று தெரியவில்லை!

இண்டைக்கும் கோத்தாபயவுக்கும், மகிந்தவுக்கும் இடையில் இருக்கக் கூடிய நுண்ணளவிலான (மைக்றோ பவர் ஸ்ட்ரகிள்) அதிகாரப்போட்டி இருந்துகொண்டேயிருக்கு! ராணுவ இருப்பைக் கட்டமைக்க விரும்பும் கோத்தாபய ராஜபக்சவுக்கும், ஜனத்திரள் (பொப்பியூலர்) அரசியலை முன்னெடுக்க முனையும் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் ஒரு இடைவெளி இருந்துகொண்டே இருக்கும்! மகிந்த சார்பு சிவில்தரப்பு முன்னேறி வருவதற்காக நாம் காத்திருக்க வேண்டிய தேவை ஒண்டிருக்கு! இது அவர்களே முகங்கொடுக்கின்ற பிரச்சினையும் கூட!

முழுமையான ஒரு சிவில் சமூகத்தை நிறுவுவதற்காக, அரசாங்க அதிபர்கள், அமைச்சர்கள் மட்டத்திலும் ராணுவத்துக்கும் இடையியிலான ஒருமோதுகை நிகழ்ந்துகொண்டிருக்கும்! இது தவிர்க்க முடியாதது!

**2009 வரை நாம் ஆண்டு ஒன்றுக்கு குறைந்தது 5000 மனித உயிர்களைப் பலிகொடுத்துக் கொண்டிருந்தோம்! 2009க்குப் பின்னாலான இந்த 5 ஆண்டு காலமும் அழிவுகள் ஏதும் நிகழாத நிலையில், வருடத்துக்கு 5000ப்படி சுமார் 25,000 மனித உயிர்களை, மனித வளத்தைப் பாதுகாத்திருக்கிறோம்! இறுதி யுத்தத்தில் பேரளவிலான மனித உயிர்களைப் பறிகொடுத்திருக்கிறோம்! இன்று எப்படியோ தொடர்ச்சியான மனிதவளப் பாதுகாப்புக்கு வழி ஏற்பட்டிருக்கு! எமது கடமை தொடர்ந்தும் எமது மனித வளத்தை பாதுகாக்கும் முறையில் நாம் பயணிக்கவேண்டும் என்பதுதான்!**

ஒரு ராணுவமயப்பட்ட சமூகமாக இலங்கைச் சமூகம் இருக்கிறது! இராணுவமயப்பட்ட சூழலுக்குள் இருப்பது தமிழர்கள் மட்டுமல்ல! புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதல்கள் சிங்களப் பகுதிகளையும் ராணுவச் சூழலுக்குள் இழுத்து வந்தது! எப்போதும் அவர்களும் சோதனைச் சாவடிகளுக்கு மத்தியில்தான் வாழ வேண்டியிருந்தது! ஒரு சுதந்திரமான நடமாட்டத்துக்குரிய உத்தரவாதம் அங்கும் வழங்கப்பட்டிருக்கவில்லை!

**யோகா:** நீங்கள் இங்கு “குறிப்பிட்ட காலம் காத்திருக்கவேண்டிய தேவையொண்டிருக்கு” என்ற கருத்தை அடிக்கடி முன்வைக்கிறீர்கள்! இன்றைய சூழலில் நீங்கள் கூறுகின்ற அத்தகைய ஒரு காலம் வரை தமிழ்ச் சமூகத்துக்கும், இராணுவத்துக்கும் இடையில், ஓர் ஒருமைப்பாட்டுடன் பயணிப்பதற்கான சாத்தியக்கூறுகள், தருணங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு என்று நினைக்கிறீர்களா? அல்லது தமிழ்ச் சமூகத்துக்கும், இராணுவத்துக்கும் இடையிலான முரண்களை எப்படிக் கையாள்வது என்று நினைக்கிறீர்கள்?

**ராஜன்:** மாஸ்ரர்... உண்மையில் இந்தக் கேள்விக்கான பதில் நாங்கள் மேற்கொள்ளுகின்ற நடவடிக்கைகளிலும், கையாளவேண்டிய தந்திரோபாயங்களிலும்தான் தங்கியிருக்கிறது! ஆனால் எமது கடமை, அவர்களுடன் மோதுகின்ற சந்தர்ப்பங்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்! மோதும் விதமான (சிறீதரன், சிவாஜிலிங்கம், அனந்தி போன்ற அரசியல் கற்றுக்குட்டிகளின்) கருத்துக்களை வெளிப்படுத்துவதிலும் அர்த்தமில்லை! அவர்களுடன் மோதி வெல்லமுடியுமா என்றால் இல்லை! பல லட்சம் துருப்புக்களைக்கொண்ட மிகப்பெரும் சக்தி!

இவர்களை வெற்றிகொள்வதற்கு, இவர்களைச் சிவில் சமூகப் பிரதிநிதிகளாக மாற்றுவதற்குரிய தந்திரோபாயங்களை நாம் கையாளவேண்டும். உதாரணத்துக்கு கட்டளைத் தளபதி உதயபெரேராவையோ, ஹத்துருசிங்காவையோ ஒரு நிகழ்ச்சியில் ஒரு மாலை போட்டு, மேடையில் இருத்துவதில் எமக்கு ஒரு நட்டமும் ஏற்படப்போவதில்லை! கிராமப்புறங்களில சனசமூக நிலைய வைபவங்களில், விளையாட்டுப்போட்டி நிகழ்வுகளில் இதுதான் நடந்து கொண்டிருக்கு! ஆனால் மோதுப்பட்டால் ஊர் முழுவதும் இரையாகும்! அதுமட்டுமல்ல மக்களுடைய நிம்மதி குலைந்து போகும்! 30 ஆண்டு காலமாக நாம் கண்ட ஒரு வரலாறு! இண்டைக்கு உலகில் உள்ள எந்த அரசுகளையும் மோதி வெல்ல முடியாது!


நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விசயம் உலகில் இலங்கை ராணுவம் ஒரு பெருமைக்குரிய ராணுவமாக இருக்கிறது என்பதை! அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் ஈராக், சோமாலியா, ஆப்கானிஸ்தான், சிரியா, லிபியா என்று ராணுவ உதவிகளைச் செய்தது! ராணுவத்தை நேரடியாகவும் இறக்கியது! ஆனால் இந்த நாடுகளில் இண்டைக்கும் தொடர்ச்சியாக வன்முறைகளும் அழிவுகளும் நடந்துகொண்டிருக்கு! இலங்கை ராணுவம்தான் வன்முறைக்கான ஒரு பிரச்சினையை முழுமையாக முடிச்சிருக்கு! அதற்கு நாங்கள் கொடுத்த விலை அதிகம்தான்!

ஆனால் மறுபுறத்தில் ஆண்டு 2009 வரை நாம் ஆண்டு ஒன்றுக்கு குறைந்தது 5000 மனித உயிர்களைப் பலி கொடுத்துக் கொண்டிருந்தோம்! 2009க்குப் பின்னாலான இந்த 5 ஆண்டுகாலமும் அழிவுகள் ஏதும் நிகழாத நிலையில், வருடத்துக்கு 5000ப்படி சுமார் 25,000 மனித உயிர்களை, மனித வளத்தைப் பாதுகாத்திருக்கிறோம்! இறுதி யுத்தத்தில் பேரளவிலான மனித உயிர்களைப் பறிகொடுத்திருக்கிறோம்! இன்று எப்படியோ தொடர்ச்சியான மனித வளப் பாதுகாப்புக்கு வழி ஏற்பட்டிருக்கு! எமது கடமை தொடர்ந்தும் எமது மனித வளத்தை பாதுகாக்கும் முறையில் நாம் பயணிக்கவேண்டும் என்பதுதான்!

இங்கு முக்கியம், நாம் ஏற்கனவே குறிப் பிட்டதுபோல் தமிழர்களின் தந்திரோபாயங்களும், சாணக்கியமும் தான் எமது மக்களைப் பாதுகாக்கும்! அரசியலில் முதன்மையான நோக்கம் சக மனித சமூகங்களின் பாதுகாப்புக்குட்பட்ட முறைமையில், நாம் சார்ந்த சமூகங்களின் நலன்களை எப்படிப் பேணுவது என்பதுதான்! அரசியல் என்பது எத்தனையோ வளைவு, சுழிவு, நெளிவுகளுக்கூடாகப் பயணிப்பதுதான்! இதில் உண்மை, நேர்மை, சத்தியம், வீரம் என்பதையெல்லாம் சில வேளைகளில் கடைப்பிடிக்க முடியாமலே போய்விடும்! இதுவே யதார்த்தமும் கூட! இங்கு இலக்கு, பாதை பற்றிய புரிதல்களை அவதானத்தில் கொள்ளவேண்டியது அவசியம்!

ஒரு குறிப்பிட்ட காலத்துக்கேனும் வன்முறையற்ற செயற்பாடுகள் இருந்தால்தான் ஒரு சிவில்சமூகத்துக்குரிய பண்புகளை மீண்டும் புனர்நிர்மாணம் செய்ய முடியும்! இதன் பொருட்டு நமது பேச்சுக்களும், அணுகுமுறைகளும் வன்முறையற்றதாக அமையவேண்டும்! அதனூடாகத்தான் ஜனநாயகச் சூழலை, ஜனநாய கப் பண்புடன்கூடிய சமூகத்தைப் படைக்க முடியும். அதற்கும் குறிப்பிட்ட கால அவகாசம் தேவை! இதன் அர்த்தம் மக்களின் தன்னெழுச்சியான கிளர்ச்சிகளைத் தவிர்க்க வேண்டுமென்பதல்ல!

(தொடரும்)



# தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்தாத பொலிஸாருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## பொலிஸ் தலைமையகம் அறிவிப்பு

தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்தாத பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள பொலிஸ் தலைமையகம் தீர்மானித்துள்ளது

இத்தகைய உத்தியோகத்தர்கள் தொடர்பிலான முறைப்பாடுகளை பொலிஸ் தேர்தல்கள் அலுவலகத்தில் முன்வைக்குமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன கேட்டுள்ளார்.

தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்துவது பொலிஸாரின் கடமை என்பதோடு, அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

சுவரொட்டிகள், பதாகைகளைக் காட்சிபடுத்தும் மற்றும் அதற்கான ஆலோசனைகளை வழங்குவோருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது


இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் முதலில் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறும், இதன்போது உரிய பதில் கிடைக்காவிட்டால் பொலிஸ் தேர்தல்கள் அலுவலகத்தடம் முறையிட முடியும்.

0112 42 11 11 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி பொலிஸ் தேர்தல்கள் அலுவலகத்தில் முறைப்பாடு செய்ய முடியும்.

இந்த முறைப்பாட்டிற்கு அமைய பிரசார சுவரொட்டிகள், பதாகைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதோடு, தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்தாத பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# அரசாங்கத்தை விமர்சிக்கும் முஸ்லிம் காங்கிரஸ்

## பிரதி அமைச்சர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

அரசாங்கத்தின் சலுகைகளை அனுபவிக்கும் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்தையே விமர்சிப்பதாக பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் உரையாற்றியபோதே பிரதி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரச வாகனங்களில், அரசாங்கம் வழங்கிய பாதுகாப்புடன் சென்று முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்தை குறைகூறி வருகின்றனர்.

எனினும் கொழும்பில் இதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

தேர்தல் காலத்தில் புத்தி சாதூர்யமிக்க முஸ்லிம் மக்களுடன் விளையாடுவதற்கு முற்பட வேண்டாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# போதைப்பொருள் வர்த்தகர்களின் சொத்துக்களை அரசுடமையாக்க திட்டம்

(கொழும்பு)

போதைப் பொருட்கள், தங்கம் மற்றும் ஆட்கடத்தல்களில் ஈடுபடும் வர்த்தகர்களின் சொத்துக்கள் அரசுடமையாக்கப்பட உள்ளது.

இது தொடர்பில் சட்டம் கொண்டு வர அரசாங்கம் உத்தேசித்துள்ளது, குறித்த வகையிலான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு அதன் மூலம் குவிக்கப்பட்ட சொத்துக்களை அரசுடமையாக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

நாடு முழுவதிலும் பாரியளவில் தங்கம், போதைப் பொருள் மற்றும் சட்டவிரோத ஆட்கடத்தல்களில் ஈடுபடும் பத்து பிரதான வர்த்தகர்களின் சொத்துக்கள் பற்றிய விபரங்களை புலனாய்வுப் பிரிவினர் திரட்டியுள்ளனர்.

கந்தர பிரதேசத்தைச் சேர்நத ஹெரோயின் வர்த்தகர் ஒருவரின் 200 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை அரசுடமையாக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

குறித்த வர்த்தகருக்குச் சொந்தமான பத்து ரோலர் படகுகள், காணிகள் உள்ளிட்ட பல்வேறு சொத்து விபரங்கள் திரட்டப்பட்டுள்ளன.

# தேர்தல் விதிகளை மீறுவோர் மீது சட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை

## தேர்தல் கண்காணிப்பாளர்கள் கவலை

(கொழும்பு)

தேர்தல் சட்டத்தை மீறுவோர் தொடர்பில் ஒரேவிதத்தில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காலியில் வேட்பு மனுத்தாக்கல் தினத்தன்று வேட்பாளர் ஒருவரும் அவரின் ஆதரவாளர்கள் சிலரும் பொலிஸ் அதிகாரிகள்மீது தாக்குதல் மேற்கொள்வதற்கு முயற்சித்ததாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

எனினும் அவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துளளார்.

இதேவேளை, தேர்தல் சட்டம் மீறப்படுகின்றபோது பொலிஸார் நேரடி தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என பவ்ரல் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகளுடன் தொடர்புபடுபவர்களுக்கு எதிராக அரசியல் கட்சிகளும் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டிஆரச்சி தெரிவித்துள்ளார்.

# தேர்தல் சுவரொட்டிகளை அகற்ற 20 மில்லியன் ரூபா ஒதுக்கீடு



மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தலுடன் தொடர்புடைய பிரசார சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை அகற்றுவதற்காக 20 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு தேர்தல்கள் ஆணையாளர் இணங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை அகற்றுவதற்காக 451 தொழிலாளர்களை இணைத்துக்கொள்ளவும் பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. மேல் மற்றும் தென் மாகாணங்களில் உள்ள 153 பொலிஸ் நிலையங்களின் ஊடாக தேர்தல் பிரசார சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் அகற்றப்படவுள்ளன.

# திருமலையில் உதயமாகவுள்ள தேசிய கல்வியியற் கல்லூரி




(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழிநுட்பம் ஆகிய படங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை மிக நீண்ட காலமாக இருந்து வருகின்றது. இக்குறைபாட்டைப் போக்குவதற்கு திருகோணமலை மாவட்டத்தில் தேசிய கல்வியியற் கல்லூரி ஒன்று அமைக்கப்பட வேண்டும் என கிழக்கு மாகாண முதலமைசக்சர் நஜீப் ஏ மஜீத், கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தவிடம் வேண்டியதற்கமைய, உடனடியாக திருகோணமலையில் கல்வியியற் கல்லூரி ஒனறை அமைக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களைச் சேரந்த 121 பாடசாலைகளுக்கு தொழிநுட்ப அறிவை மேம்படுத்தும் வகையில் தொலைக்காட்சிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை திருகோணமலை விவேகானந்தா கல்லூரியில், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ.நிஷாம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத், பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே, மாகாண கல்வி அமைச்சர் விமல் வீர திசாநாயக்க உட்பட கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளும் கலந்துகொண் டனர். இதன் பிற்பாடு கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத் அவர்களை அவர்களது உத்தியோக பூர்வ இல்லத்தில் சந்தித்து கலந்துறையாடினார்.

இதன்போதே தேசிய கல்வியியற கல்லூரி ஒன்றை அமைகக வேண்டும் என முதலமைச்சர் வேண்டிக் கொண்டதற்கிணங்க தேசிய கல்வியியற் கல்லூரி அமைக்கப்பட வேண்டிய இடத்தையும் கல்வி அமைச்சர் முதலமைச்சருடன் சென்று பார்வையிட்டார்.

# உரிமைகளை அனுபவிக்கும் பெண்கள் உள்ள நாடு இலங்கை

## முதல் பெண்மணி ஷிரந்தி பெருமிதம்

(கொழும்பு)

இலங்கை அரசியலமைப்பின படி பல உரிமைகளை பெணகள் அனுபவித்து வருகின்றனர் என்று ஜனாதிபதியின் பாரியாரும் இலங்கையின் முதல் பெண்மணியுமான ஷிரந்தி ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

வாழும் கலை அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச மகளிர் மாநாடு, இந்தியாவின் பெங்களூர் நகரில் நடைபெற்றது.

ஆறாவது முறையாக நடத்தப்படும் இந்த மாநாடானது இம்முறை பரிபூரணமாக அபிவிருத்தி என்ற தொனிப்பொருளின் கீழ் நடாத்தப்பட்டது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

இலங்கை அரசியலமைப்பின் படி ஆணும் பெண்ணும் சமமானவர்கள் என்பது அனைத்துப் பிரஜைகளினதும் உரிமையுமாகும் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட நாடாக இலங்கை விளங்குகின்றது.




இலங்கையில் நடைமுறையிலுள்ள மகளிர் கொள்கைகளுக்கு அமைய பெண்களுக்கான அரசியல் மற்றும் பொது உரிமைகள், கல்வி, பொருளாதார நலன்கள், பாதுகாப்பு மற்றும் போசனை, சமூக சீர்கேடுகளிலிருந்து பாதுகாப்பு, சித்திரவதைகளிலிருந்து விடுபட்ட வாழ்க்கை உள்ளிட்ட பல உரிமைகளை இலங்கைப் பெண்கள் அனுபவித்து வருகின்றனர் என்றார்.

# ஐக்கிய தேசியக் கட்சியிலேயே அரசியல் பயணம் தொடரும்

(கொழும்பு)




தமது மனைவிக்கு மேல் மாகாணசபை தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப் படாவிட்டாலும் தாம் தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியலை தொடரப் போவதாக கொழும்பு மாநகர மேயர் ஏ.ஜே.எம் முஸம்மில் தெரிவித்துள்ளார்.

முஸம்மிலின் மனைவி பெரோஸா மேல்மாகாணசபை தேர்தலில் போட்டியிட ஐக்கிய தேசியக் கட்சியிடம் கோரிக்கை விடுத்திருந்தார். எனினும் அந்தக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

இதனையடுத்து அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழுவில் இருந்து வெளியேறினார். எனினும் வேறு கட்சியில் இணையப்போவதில்லை என்றும் அரசியலில் இருந்து ஒதுங்கியிருக்கப் போவதாகவும் பெரோஸா குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையிலேயே தாம் ஐக்கிய தேசியக் கட்சியில் தொடரப் போவதாக முஸம்மில் தெரிவித்துள்ளார்.






கவிஞர் நெற்கொழுதாஸனின் "ரகசியத்தின் நாக்குகள்" கவி இதழ் வெளியீட்டுவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை திருமறைக்கலாமன்ற அழகியற் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பதிவுகள்... (48,90)

# வடக்கில் கடந்த வருடம் மட்டும் 78ஆயிரம் தொன்வெங்காயம் செய்கை

## வடமாகாண விவசாயத்துறை அமைச்சர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் கடந்த வருடம் 78 ஆயிரம் மெற்றிக்தொன் வெங்காயம் செய்கை பண்ணப்பட்டுள்ளது. இதில் மிகப் பெரும் பங்கு யாழ்ப்பாணத்திலே செய்கை பண்ணப்பட்டிருக்கின்றது என வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

விதை வெங்காயச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் யாழ்.மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாத சுந்தரம் தலைமையில் கைதடியில் வயல் விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

வெங்காயச் செய்கையில் ஈடுபட்டவர்கள் கடந்த காலத்தில் பொருளாதாரத்தில் மிக உயர்வான நிலையிலிருந்துள்ளார்கள். வெங்காயச் செய்கை மூலமான வருமானத்தில் வீடுகளைக்கட்டி, வாகனங்களை வாங்கிய விவசாயிகளை எனக்குத் தெரியும். அந்தளவுக்கு இலாபம் ஈட்டக்கூடிய பயிராக வெங்காயம் இருந்துள்ளது.

இருப்பினும், போர் எல்லாவற்றையும் தலைகீழாகப் புரட்டிப் போட்டுவிட்டது. இப்போது தான் எமது விவசாயிகள் மீண்டும் நிமிர்ந்தெழ ஆரம்பித்திருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் விளைகின்ற வெங்காயத்தின் தரம் தென்னிலங்கை வெங்காயத்தை விட உயர்வானது. இங்கு விளைவிக்கப்படுகின்ற வெங்காயங்களுக்கு சந்தை வாய்ப்பு எப்போதும் தென்னிலங்கையில் இருந்துகொண்டே இருக்கிறது. இதனால், வெங்காயச் செய்கையை வடக்கில் அதிகரித்தால் அதிக வருமானத்தை நாங்கள் பெறலாம்.

தரமான வெங்காய விதைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. இவற்றை இந்தியாவிலிருந்து அதிகம் எடுக்க வேண்டியுள்ளது. இதனால், வடமாகாண விவசாயத் திணைக்களமானது வெங்காய விதைகளை நாமே உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் விதை வெங்காயச் செய்கையை ஊக்குவிக்கின்றது. இது இப்போது கைதடியில் சாத்தியமாகியுள்ளது.

எமது வெங்காயச் செய்கையாளர்கள் மீண்டும் பொருளாதாரத்தில் உயர்வடையும் காலம் வெகுதூரத்தில் இல்லை. அதற்கு நாம் எப்போதும் பக்கபலமாக இருப்போம் என்றார். (48)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யோசப் பாலாவின் "உளம் மகிழ" நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை மன்னார் தமிழ்ச்சங்க தலைவர் தமிழ்நேசன், நயப்புரையை மூத்த தலைவர் உள சமூகவளவாளர் படைப்பாளர் திருமதி கோகிலாமகேந்திரன் சிறப்புரையை மூத்த பத்திரிகையாளர் ராதேயன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் நூலின் முதற்பிரதியை பருத்தித்துறை ஞானாலய தலைவர் இ.து.குலசிங்கம் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

# கைகளின் அசைவுகளில் வெளிப்படும் உண்மைகள்

## கர்வம் பிடித்தவர்

ஒருவர் தன்னுடைய ஒரு கையைக் கீழே தொங்கவிட்டு இன்னொரு கையை இடுப்புக்கு நேராகச் சிறிது மடக்கி உயர்த்தியவாறு நடப்பாரானால் அல்லது நிற்பாரானால், அவர் மிகவும் கர்வம் பிடித்தவர் என்பதை அறியலாம். இவர் தனக்குரிய நியாயமான அந்தஸ்த்தைக் காட்டிலும் சற்றுக் கூடுதலான அந்தஸ்துடையவராகவே தன்னை எண்ணிக் கொண்டிருப்பார். அந்தத்தகுதிக்கு கூடுதலான கௌரவத்தை, பெருமையை நிலைநாட்டிக் கொள்வதற்காக எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்யத்தயங்கவேமாட்டார்.

இவர் வெளிப்பார்வைக்கு பெரிய வீரனைப் போல் காட்சியளித்தாலும் உள்ளூரகோழையாக, பயந்தாங்கொள்ளியாகவே இருப்பார். கோழைத்தனத்தின் காரணமாகத் தனக்குத்துணையாக சில பல முரடர்களைப் பக்கத்துணையாக வைத்துக் கொள்வார். பகட்டான வாழ்க்கையை நடாத்திக் கொண்டிருப்பார். எந்த நேரமும் இவரை நோட்டம் விட்டால் பெரும் புள்ளிகளை, அதிகாரிகளை அண்டியவண்ணம் பழகிக்கொண்டிருப்பார். பெரிய இடத்துத் தொடர்புகளைக் கண்டு பிறர் தன்னை மதிக்க, பயப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கும் அபிலாசையில் எண்ணப்பாங்கில் மூழ்கி இருப்பார். படாடோபமான முறையில் நடந்து கொள்ளும் இவர் தன்னைப் பற்றி பெருமையாகவும் பிறரைப்பற்றி இழிவாகவும் பேசிக் கொண்டிருப்பார். பெரிய துன்பங்கள் அல்லல்கள் இடைஞ்சல்கள் வந்தாலும் தனது பெருமையைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு அவற்றைவெளிக்காட்டாமல் தீக்கோழி தலையைப் புதைப்பதுபோல் பொறுத்துக் கொள்வார். இவ்வரைப் புகழ்வதன் மூலம், இவரிடம் இல்லாத தொன்றை இருப்பதாகக் கூறுவதனால் வசப்படுத்தி காரியசித்திகளைப் பெற்றுக்கொள்ளமுடியும். எளிதில் பிறரை நம்பி ஏமாந்து போவார்.

ஜோதிர் வித்யா ரத்னா
V.A.சிவராசா,
(B.A.B.PhiI.Dip - in -Ed)

(தொடரும்)

# இன்னிசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப்பண்பாட்டு பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மீக நிகழ்வுகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

இதில் எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிமை மு.ப. 10.30 மணிக்கு ஆலய பூசை முடிவுற்றதும் பேரவை மண்டபத்தில் பக்கவாத்திய சகிதம் இன்னிசை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

# முரசின் இன்றைய பலன்



(11.02.2014 செவ்வாய்க்கிழமை)

விஜய வருஷம் தை மாதம் 29 ஆம் திகதி.
மரணயோகம் / துவாதசி . திருவாதிரை நட்சத்திரம் மாலை 06.27 வரை.
பின் புனர்பூசம்.
இராகு காலம் 03.34 - 05.04 வரை. சுபநேரம் 11.04 - 12.34 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — சந்திக்க வேண்டுமென்று நினைத்தவர் எதிர்பாராது முகங்கொடுத்தல், சாமர்த்தியமாகப் பேசி காரியசித்தி ஏற்படுத்த முயலல்.

**ரிஷபம்** — இழுபட்டுக் கொண்டிருக்கும் நிலுவை பெற காவல் துறையை நாடுதல், வர்த்தக நிலையத்தில் வாடிக்கையாளர்களைக் கண்காணிக்க கமரா பொருத்தும் எண்ணம்.

**மிதுனம்** — விளையாட்டினால் சாதனையும், பாராட்டும், பரிசில்களும் கிடைத்தல், அரைகுறையாக விட்டிருந்த பணிகளை முடித்து விட பிரயாசைப்படல்.

**கடகம்** — ஈகோ பாதிப்பினால் இனந்தெரியாத கோபாவேசத்திற்கு ஆளாகுதல், அலைச்சலினால் அகால வேளையில் உணவும், தேகநலப்பாதிப்பும் உண்டாதல்.

**சிம்மம்** — முரண்பாடு விலகியதால் சுமுகமான சூழ்நிலை ஏற்படல், பிறருக்கு பரிந்துரை செய்ய ஒருக்காலும் உடன் பட வேண்டாம்.

**கன்னி** — பாராமுகமாகச் சென்றோர் உறவுக்கு கரம் நீட்டுவர், தனியார் தறையைக் கைகழுவி விட்டு அரசத்துறையில் சேரும் எண்ணப்பாங்குண்டு.

**துலாம்** — சகோதர வழியினால் எதிர்பாராத உதவி கிடைக்கும் சந்தர்ப்பம் உண்டு, சுபகாரியமொன்றுக்கு கடன்பட நண்பரிடம் கையேந்தும் நிலை.

**விருச்சிகம்** — பங்கு பற்றிய நிகழ்வில் பாராட்டும் கௌரவமும் கிடைத்தல், தேங்கிக்கிடந்த பணிச்சுமை அகல ஊழியர்கள் ஒத்துழைப்பு.

**தனுசு** — கௌரவத்தைப் பாதித்து மனம் நோகவைக்கும் சம்பவம் ஏற்படல், பிறருக்கு வக்காளத்து வாங்க முற்பட்டு முரண்பாடுதோன்றல்.

**மகரம்** — குணமாகாத நோயினால் வருத்தமடையும் நிலையில் தெய்வ நம்பிக்கை ஏற்படல், வரவு கூடி செலவினங்கள் குறைந்ததால் மகிழ்வு நிலையேற்படல்.

**கும்பம்** — வெளியூர் பயணம் பற்றிய இரண்டுங்கெட்டான் நிலையேற்படல், மறைமுகப்போட்டிகள் இல்லாததால் தொழில் சிறப்பித்தல்.

**மீனம்** — திட்டமிடப்பட்ட பணியில் திடீர் மாற்றம் செய்தல், சிந்தித்து செயற்பட்டதால் வரவிருந்த துயர் விலகிச் செல்லல்.

# பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிருப்தி



(லாகூர்)

சர்ச்சைக்குரிய பல முன்மொழிவுகளுக்கு வாக்களித்ததன் மூலம் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை எங்களுக்குத் துரோகம் இழைத்துவிட்டது என பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஸாகா அஷ்ரப் விசனமடைந்துள்ளார்.

ஐ.சி.சி.யில் இந்தியா, அவுஸ்ரேலியா, இங்கிலாந்து ஆகிய கிரிக்கெட் சபைகளின் ஆதிக்கம் உள்ளிட்ட சர்ச்சைக்குரிய பல முன்மொழிவுகளின் வரைவுக்கு இலங்கை, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன.

இறுதி வரை எதிர்ப்புத் தெரிவித்து வந்த தென்னாபிரிக்கா பின்னர் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளது. இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே ஸாகா அஷ்ரப் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை எங்களை ஏமாற்றிவிட்டது. சர்ச்சைக்குரிய மூவர் கூட்டணி முன்மொழிவுகளை முதலில் எதிர்த்து விட்டு பின்பு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ஒரு வாக்கு பின் தங்கியிருந்தால் இந்த சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த முடியாமல் போயிருக்கும். ஆனால் தென்னாபிரிக்கா அந்த ஒரு வாக்கை அளித்து துரோகம் செய்து விட்டது. எங்கள் நிலைப்பாடு (பாகிஸ்தான், இலங்கை) கொள்கைகள் அடிப்படையில் எதிர்ப்பு தெரிவிப்பதாக இருந்தது, ஆனால் பலர் பண பலத்திற்கு மண்டியிட்டு விட்டனர். மற்ற நாட்டு கிரிக்கெட் சபை வருவாயையும் இந்த மூவர் கூட்டணி சாப்பிடப்போகிறது அதுதான் நடக்கப்போகிறது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இது குறித்து பாகிஸ்தான் முன்னாள் விக்கெட் காப்பாளர் ரஷித் லத்தீப் கருத்து தெரிவிக்கையில், கிரிக்கெட் சூதாட்டத்தை விட இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்ரேலியா கூட்டணி மோசமானது. இது அவர்கள் போக்கிற்கு முடிவுகளை எடுக்க வழங்கப்பட்ட அதிகாரமாகும். 3 பேர் மட்டும்தான் ஐ.சி.சி. என்றால் அது ஐ.சி.சி. இருப்பதன் அர்த்தம் அல்ல என்றார்.

# நெடுந்தீவில் இன்று பிரதேச விளையாட்டு விழா

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.00 மணிக்கு நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு பிரதேச செயலர் ஆர். சிறி தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் எஸ். எம். ராஜரணசிங்கம், யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி எம். ஆர். மோகனதாஸ், கௌரவவிருந்தினர்களாக நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் எஸ்.பி. அருளப்பு, நெடுந்தீவு கடற்படை முகாம் கட்டளை அதிகாரி கப்டன் கே.ஏ.பி.எஸ். கே. காரியாபெரும,நெடுந்தீவு பொலிஸ் நிலைய அதிகாரி ஈ.எஸ்.பி. ஏக்கநாயக்கா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்றைய தினம் சுவட்டு நிகழ்வுகளும், கபடிப் போட்டியின் இறுதிப் போட்டிகளும் நடைபெறும் எனவும், இப்போட்டியில் கிராமப் பெரியோர், விளையாட்டுக்கழகங்களைச் சேர்ந்தவீர, வீராங்கனைகள், இரசிகர்கள், விளையாட்டு ஆர்வலர்கள், நலன்விரும்பிகள் என அனைவரையும் கலந்துகொள்ளுமாறு நெடுந்தீவு பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்தர் மயூரன் கேட்டுள்ளார். (93)

# இல்ல மெய்வல்லுநர்

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாசாலை அதிபர் க. சரவணபவன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்வி நிர்வாக பிரதிப்பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய விளையாட்டு சேவைக்கால ஆலோசகர் திருமதி கோசலை குலபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (104)

# நோர்வே வீரர் சாதனை



(சோச்சி)

குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் அதிக பதக்கங்களை வென்ற வீரர் என்ற சாதனையை நோர்வே நாட்டு வீரர் சமப்படுத்தியுள்ளார்.

சோச்சியில் நடைபெற்று வரும் இந்த போட்டியில் 40 வயதுடைய ஒலே ஈனர் 12 பதக்கங்களை பெற்று இந்த சாதனையை நிலைநாட்டினார்.

இதன்பிரகாரம் 2 பதக்கங்களுடன் முதலிடத்திலுள்ளதுடன் , அமெரிக்கா மற்றும் கனடா முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களிலுள்ளன. .

இந்த ஒலிம்பிக் போட்டியின் முதல் தங்க பதக்கத்தை அமெரிக்க பனிச்சறுக்கல் வீரர் சேஜ் கோட்ஸென்பர்க் வென்றார்.



# அக்ரமிற்கு அபராதம்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் அக்ரம் அந்நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள பஞ்சாப் பல்கலைக்கழக வளாகத்தின் அருகில் வேகமாக சென்று கொண்டிருந்தபோது போக்குவரத்துப் பொலிஸாரினால் நிறுத்தப்பட்டார். அந்த இடத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 60 கி.மீ வேகத்தை மீறி அக்ரம் 78 கி.மீ வேகத்தில் சென்றுகொண்டிருந்தது போக்குவரத்துப் பொலிஸாரால் சுட்டிக்காட்டப்பட்டு அபராதத் தொகையாக 500 ரூபாவும் விதிக்கப்பட்டது.

இதுகுறித்து எந்தவித எதிர்ப்பும் காட்டாமல் அக்ரம் அபராதத் தொகையை செலுத்தியதாக போக்குவரத்து அதிகாரி குறிப்பிட்டார். போக்குவரத்து விதிகளை மீறியதற்காக அந்நாட்டின் மற்றொரு கிரிக்கெட் வீரரான உமர் அக்மல் கைது செய்யப்பட்ட சில நாட்களைத் தொடர்ந்து இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

போக்குவரத்து விதிகளை மீறியது, போக்குவரத்துப் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டது மற்றும் வாக்குவாதத்தின்போது போக்குவரத்து அதிகாரியின் சட்டையைப் பிடித்து கிழித்தது போன்ற குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டு விசாரணையை மேற்கொண்டுள்ள அக்மல் தற்போது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

# மெய்யப்பன் குற்றவாளி விசாரணைக் குழு அறிக்கை

(புதுடில்லி)

ஐ.பி.எல். ருவென்ரி-20 தொடரில் சூதாட்ட குற்றச்சாட்டுக்குள்ளான குருநாத் மெய்யப்பனின் குற்றம் நிருபணமானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டது பெரும் சர்ச்சையை கிளப்பியது.

அத்துடன் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கௌரவ உறுப்பினர் குருநாத் மெய்யப்பன், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி உரிமையாளர்களில் ஒருவரான ராஜ்குந்த்ரா ஆகியோர் சூதாட்டத்தில் சிக்கியது பூதாகரமான பிரச்சினையாக வெடித்தது.

ஐ.பி.எல்.சூதாட்டம் குறித்து விசாரணை நடத்த உயர் நீதிமன்றம், பஞ்சாப் மற்றும் ஹரியானா நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி முகுல் முட்கல், சிரேஷ்ட வழக்கறிஞர் நாகேஷ்வர் ராவ், அசாம் கிரிக்கெட் சங்க உறுப்பினரும், நீதிபதியுமான நிலாய் தத்தா ஆகியோர் கொண்ட புதிய சபையை அமைத்தது. விசாரணை நடத்திய குழு விசாரணை அறிக்கையை நேற்று சமர்ப்பித்துள்ளது.

அறிக்கையில் குருநாத் மெய்யப்பன் மீதான குற்றச்சாட்டு நிரூபணமானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் புகார் தொடர்பாக விசாரணை நடத்தப்படவேண்டும் எனவும் அறிக்கையில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. கிரிக்கெட்டை தூய்மையான விளையாட்டாக மாற்றவும் சூதாட்டங்களை தடுக்கவும் விசாரணை குழு 10 குறிப்புகள் கொண்ட கருத்துக்களை மேல் நீதிமன்றத்திற்கு கொடுத்துள்ளது.

# தென்னாபிரிக்காவில் ஐ.பி.எல்.?

INDIAN PREMIER LEAGUE

இந்தாண்டுக்கான ஐ.பி.எல். ருவென்ரி-20 தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெற அதிக வாய்ப்புக்கள் உள்ளன. பங்களாதேஷ், ஐக்கிய அரபு இராட்சியம் மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் நடத்தலாம் என இறுதி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டுக்கான ஐ.பி.எல். ஏலம் நிறைவடைந்ததும் எங்கு நடாத்துவது என முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் தேர்தல்கள் ஏப்ரல் மாதமளவில் நடைபெற உள்ளமையே இந்த மாற்றத்திற்கு காரணமாகும் என்ற நிலையில் 2009 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடாத்தப்பட்டது.

தேர்தல்களின் அடிப்படையில் பாதிப் போட்டிகளை இந்தியாவிலும் பாதிப் போட்டிகளை வெளிநாடுகளிலும்நடாத்துவது என்ற திட்டம் உள்ளாதாக இந்தியா கிரிக்கெட் சபை உத்தியோகஸ்தர்கள் தெரிவித்துள்ள்னர்.

ஏப்ரல் மாதத்தில் தேர்தல் இடம் பெறின் முதற்கட்ட போட்டிகளை வெளிநாடுகளிலும் இறுதிக்கட்டப் போட்டிகளை இந்தியாவிலும் நடாத்த முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மே மாதத்தில் தேர்தல் இடம்பெறின் முதற்கட்ட போட்டிகள் இந்தியாவிலும், இறுதிக் கட்டப் போட்டிகள் வெளிநாட்டிலும் நடைபெறும் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

வெளிநாட்டு போட்டிகள் அதிகமாக தென்னாபிரிக்காவில் நடைபெறவே வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளது. நேரப் பிரச்சினையை தவிர அங்கே போட்டிகள் நடைபெற வேறு தடைகள் இல்லை. பங்களாதேஷைப் பொறுத்தமட்டில் ஐந்து மற்றும் ஏழு நட்சத்திர விடுதிகள் போதியளவு இல்லை என்பதுடன் தொடர்ச்சியாக போட்டிகள் நடைபெறுவதனால் ஆடுகளம் போட்டிகளை நடாத்தக் கூடியளவில் இருக்காது என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐக்கிய அரபு இராச்சியத்தைப் பொறுத்தளவில் வசதிகள் உள்ள போதும் அந்த நாட்டின் சட்டத்தின் அடிப்படையில் அனுமதிகளைப் பெறுவதில் சிக்கல்கள் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே இவற்றின் அடிப்படையில் தென்னாபிரிக்காவில் போட்டிகள் நடைபெற வாய்ப்புக்கள் உள்ளன. ஆரம்பத்தில் இலங்கையில் இந்தப் போட்டிகள் நடைபெறலாம் என்ற எதிர்பார்ப்புக்கள் இருந்தபோதும் இப்போது இல்லை என்ப்து உறுதியாகியுள்ளது.

## வட்சன் சந்தேகம்

தென்னாபிரிக்காவுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் சகலதுறை வீரர் வட்சன் விளையாடுவதை இப்போது உறுதிப்படுத்த முடியாது என அவுஸ்ரேலிய அணியின் பயிற்றுநர் டரன் லீமன் தெரிவித்துள்ளார். தசைப்பிடிப்புக் காரணமாக வட்சன் சிரமப்பட்டு வருவதாகவும், அதிலிருந்து அவர் மீளும் பட்சத்தில் விளையாடுவதற்கான வாய்ப்பு ஏற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புதிய கப்டன் மோர்தஸா

இலங்கையுடனான இரண்டு ருவென்ரி - 20 போடிகளுக்கான பங்களாதேஷ் அணிக்கு மஷ்ரபி மோர்தஸா தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த சனிக்கிழமை முடிந்த இலங்கையுடன்



இரண்டாவது டெஸ்டில் பங்களாதேஷ் அணித் தலைவர் முஷ்பீகுர் ரஹீ மின் விரலில் காயம் ஏற்பட்டதை தொடர்ந்தே அவருக்குப் பதில் மோர்தஸாவிடம் தலைமை பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனினும் தமீம் இக்பால் தொடர்ந்தும் உப தலைவராக இருப்பார் என்றும் அனுபவத்தை கருத்தில் கொண்டு மோர்தஸாவுக்கு தலைமை பதவி வழங்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 தொடரின் முதல் ஆட்டம் நாளை மறுதினம் சிட்டகொங்கில் நடைபெறவுள்ளது.

# பாடசாலைகளின் இல்ல மெய்வல்லுநர்

விளையாட்டுச் செய்திகள்

## இன்றைய போட்டிகள்

(கைதடி)

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தி யாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் சி. பவள-குமாரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி நிர்வாகம்) வே. பாலசுப்பிரமணியம்,சிறப்பு விருந்தினராக கைதடி ஹற்றன் நஷனல் வங்கி பொறுப்பதிகாரி ம. கோபி கிருஸ்ணா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், கிராமப் பெரியோர், விளையாட்டுஆர்வலர்கள், நலன் விரும்பிகள் என அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (51)

(யாழ்ப்பாணம்)


மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் செ. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) யோ. ரவீந்திரன், சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் பொன்னையா கலந்து கொள்ளவுள்ளனர். வீரர்களுக்கான பரிசில்களை பிரதம விருந்தினர் வழங்கவுள்ளார்.

இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், கிராமப் பெரியோர், விளையாட்டு ஆர்வலர்கள், நலன் விரும்பிகள் என அனைவரையும் கலந்து கொண்டு வீர, வீராங்கனைகளுக்கு உற்சாகமூட்டுமாறு பாடசாலைச் சமூகம் கேட்டுள்ளது. (109)

## சென். பற்றிக்ஸ் கல்லூரி பொஞ்சின் இல்லம் முதலிடம்





(யாழ்ப்பாணம்)


சென். பற்றிக்ஸ் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பொஞ்சின் இல்லம் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது.


சென். பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி கடந்த ஆறாம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

வீரர்கள் நான்கு இல்லங்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடாத்தப்பட்டன. இதில் பொஞ்சின் இல்லம் 319 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், டன் இல்லம் 248 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், மத்தியூஸ் இல்லம் 186 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும், லோங் இல்லம் 142 புள்ளிகளைப் பெற்று நான்காமிடத்தையும் பிடித்துக் கொண்டது. வினோத உடை நிகழ்வு பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்தது.

கல்லூரி அதிபர் வண. ஜெரோம் செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவரும், பொறியியலாளருமான எம்.ஆர். ஜெயச்சந்திரன், கௌரவ விருந்தினராக பழைய மாணவரும், வைத்தியருமான ரகுநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (எஸ்.பி.)

## கைதடி குருசாமி வித்தியாலயம் முதலிடம் குருசாமி இல்லம்





(கைதடி)

கைதடி குருசாமி வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் குருசாமி இல்லம் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது.

கைதடி குருசாமி வித்தியால்யத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த ஏழாம் திகதி வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

வீர,வீராங்கனைகள் மூன்று இல்லங்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடாத்தப்பட்டன. இதில் குருசாமி இல்லம் 375 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், நாவலர் இல்லம் 344 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், இரசரத்தினம் இல்லம் 295 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன. இதின் இடைவேளை நிகழ்ச்சி மற்றும் வினோத உடை போன்ற நிகழ்வுகள் பார்வையாளர்களைப் பரவசப்படுத்தியது.

வித்தியாலய அதிபர் ப. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ. கயிலாசநாதன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ந. ஸ்ரீகாந்தா, ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் அ. மனோரஞ்சிதன் ஆகியோர் கலந்துகொண்டு வெற்றியீட்டியோருக்குப் பரிசில்களை வழங்கி கௌரவித்தனர். (51)

## தொண்டைமானாறு, கெருடாவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை












சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் ஆரம்ப பாடசாலை 48

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 48







**'சாத்திரி' எனப்படும் ஸ்ரீகௌரிபால் புலிகளின் சர்வதேசப் பிரிவின் முக்கியஸ்தர்களில் ஒருவராக இருந்தவர். ஆரம்பத்தில் புலிகள் அமைப்பில் வெடி பொருள் பிரிவில் பணியாற்றியதால் 'சக்கை சியாம்' என அழைக்கப்பட்டவர். தற்சமயம் 'சாத்திரி' என்கிற புனைபெயரில் எழுத்துலகில் அறியப்படுபவர்.**

**பேட்டி கண்டவர்: அருளினியன்**

# சாத்திரி பேசுகிறேன்

**அன்ரன் பாலசிங்கத்தை விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து வெளியேற்றினார்களா?**

ஆம் வெளியேறினார்கள். இலங்கை அரசு மற்றும் விடுதலைப் புலி



லோரன்ஸ் திலகர்


களிடையான சமா தானப் பேச்சு வார்த்தைகள் தொடங்கி, ஆரம்ப இரண்டு சுற்றுப் பேச்சு வார்த்தைகள் தாய்லாந்தில் நடைபெற்றது. தாய்லாந்தில் நடந்த இரண்டாவது சுற்று பேச்சு வார்த்தையின் போதே, மேலதிகமாக புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல வனும். மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட தளபதி கருணாவும் புலிகளின் பேச்சு வார்த்தை குழுவில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

மூன்றாவது சுற்றுப் பேச்சு வார்த்தை நோர்வே "ராடிசன்" விடுதியில் நடை பெற்றிருந்தது. அங்கு புலிகள் இலங்கை அரசாங் கம் இடையான பேச்சு வார்த்தைக்கு ஆதரவும் அனுசரணையும் கொடுத்த சுமார் 30 நாடுகளின் பிரதி நிதிகளும் கலந்து கொண்டிருந்தார்கள். இங்கு வைத்துத்தான் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் அன்ரன், பாலசிங்கத்திடம் தனி நாட்டுக் கோரிக்கையை தவிர்த்து, தமிழர்கள் சுதந் திரமாகவும் சமாதானத் தோடும் வாழும் வகையிலான ஏனைய தீர்வுகளை புலிகள் தரப்பிலிருந்து முன்மொழியும்படியும் அதனை தாம் பரிசீலிப்பதாகவும், ஆனால் தனி நாட்டுக் கோரிக்கையை எந்த நிலையிலும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என திட்டவட்டமாக கூறி விட்டார்கள்.

சர்வதேசத்தின் பொறியில் மாட்டாமல் அதே நேரம் இலங்கை அரசிடம் ஏமாந்து போகாமல் இருப்பதற்காக அன்ரன் பாலசிங்கம் சமயோசிதமாக புலிகள் சுயநிர்ணய உரிமையை பரிசீலிக்கத் தயார் என்றும் அதில் உள்ளக சுய நிர்ணயம், வெளியக சுய நிர்ணயம் என இரண்டு வகையுண்டு எனவும் இந்த இரண்டு வகையில் தமிழர் களிற்கு எது சாதகமானதோ அதனை தாம் பரிசீலிக்க உள்ளதாகவும் அறிவித்தார். இதனைக் கேட்ட இலங்கை அரசாங்கத் தரப்பு பிரதிநிதி களிற்கு குழப்பம் ஏற்பட்டது. அன்றைய இலங்கை ஜனாதிபதி சந்திரிக்கா "சுய நிர்ணயத்தில் உள்ளகம், வெளி யகம் என்று எதுவும் இல்லை இப்போதுதான் இதைப்பற்றி நான் கேள்விப்படுகிறேன்" என்று அறிக்கையும் விட்டார்.

உண்மையில் அன்ரன் பாலசிங்கம் குறிப்பிட்ட "உள்ளக சுயநிர்ணய உரிமை" என்பது பிராந்திய சுயாட்சியை வழங்குகிறது. வெளியக சுயநிர்ணய உரிமை என்பது ஐ.நா. வரையறுத்த அம்சங் களை வழங்குகிறது. ஆனால் அன்ரன் பாலசிங்கத்துடன் புலிகள் சார்பாக பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட தமிழ்செல்வன் உடனேயே பிரபாகரனுடன் தொடர்பு கொண்டு "பாலசிங்கத்தார் தமிழீழக் கொள்கையை கைவிட்டு விட்டார்" என்று போட்டுக் கொடுத்தது மட்டுமல்லாமல், அன்று மாலை நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் "சுயநிர்ணயம்" என்பது பாலசிங்கம் அவர்களின் சொந்தக் கருத்தேயன்றி விடுதலைப் புலிகள் இயக்கத் தின் கருத்து அல்ல என்றும் அறிக்கையும் விட்டிருந்தார்.

அதற்கடுத்ததாக மீண்டும் தாய்லாந்தில் நடந்த நான்காவது பேச்சு வார்தையிலும், ஐந்தாவதாக ஜேர்மன் பேர்லினில் நடந்த பேச்சு வார்த்தையிலும் அன்ரன் பாலசிங்கம் ஓரம் கட்டப்பட்டது மட்டுமல்லாது, அந்தப் பேச்சு வார்த்தை முடிந்ததும்



வன்னிக்கு அழைக்கப்பட்ட அன்ரன் பாலசிங்கம் அவர்களிற்கும் பிரபாகரனிற்கும் இடையே பேச்சு வார்த்தைகள் தொடர்பாக நடந்த கடும் விவாதங்கள் நடைபெற்றது. பின்னர் அன்ரன் பாலசிங்கம் இலண்டன் திரும்பியிருந்தார். இதன் தொடர்ச்சியாக அன்ரன் பாலசிங்கத்தின் உடல் நிலை காரணமாக அவர் பேச்சு வார்த்தைகளில் இருந்து விலகிவிட்டாரெனவும், அவரது பொறுப்பினை தமிழ்ச்செல்வன் ஏற்பார் எனவும் புலிகள் உத்தியோக பூர்வமாக அறிவித்தனர்.

**அதாவது அன்ரன் பாலசிங்கம் பேச்சுவார்த்தைகளில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டார் எனக் கூறுகிறீர்களா?**

அன்ரன் பாலசிங்கம் பலவந்தமாகத்தான் வெளி யேற்றப்பட்டார். பேச்சு வார்த்தைகளின் போக்கை கவனித்தபடியே இருந்தவர் விடுதலைப் புலிகளையும் பிரபாகரனையும் பல தடைவை காப்பாற்றிய தன்னால் இந்தத் தடைவை காப்பாற்ற முடியா-மல் போய் விட்டது என தனது இறுதிக் காலங்களில் பலரிடம் சொல்லி கவலைப் பட்டுக் கொண்டிருந்தார்.

**நாதன் மற்றும் கஜன் கொலை-யை வழிப்படுத்தியது யார்?**

புலிகளின் அனைத்துலக செயலகப் பிரிவு பொறுப்பாளராகவும் பிரான்ஸ் பொறுப்பாளராகவும் இருந்த லோறன்ஸ் திலகரே நாதன் மற்றும் கஜன் கொலையை வழிப் படுத்தினார். ஆனால் இந்தக் கொலைகளை பல கோணத்தில் ஆராய்ந்த பிரெஞ்ச் காவல் துறை புலிகளே இதனை செய்தார்கள் என்று தீர்மானித்து அவர்களை நோக்கி விசாரணைகளைத் திருப்பினர். கைதாவதில் இருந்து தப்பிக்கும் முகமாக லோறன்ஸ் திலகர் வன்னிக்கு தப்பிச் சென்றார். நாதன், கஜன் கொலையை நன்கு திட்டமிடாமல் சொதப்பியதற்காக தலைமையால் திலகரின் பதவி நிலைகள் அனைத்தும் பறிக்கப்பட்டு சிலகாலம் சிறைவைக்கப்பட்டி ருந்தார். வன்னி சென்றிருந்த திலகரின் தொடர்புகள் ஏதும் கிடைக்காததால், பிரான்சில் வாழ்ந்து வந்த அவரின் மனைவி அவரின் உறவினர்களி டம் தமிழ்நாட்டிற்கு திரும்பியி ருந்தமை குறிப்பிடத்தக்கது.

**5**

**லோறன்ஸ் திலகர் இப்போது எங்கே?**

இறுதியுத்தம் வரை புலிகளுடன் இருந்த இவர் இறுதி யுத்தத்தில் இறந்து போய் விட்டார் என்றுதான் நினைக்கிறேன். ஏனெனில் அவரைப் பற்றிய தகவல் எதுவும் இல்லை.

**சபாலிங்கத்தின் கொலையை வழிப்படுத்தியது யார்? சபாலிங் கத்தை கொலை செய்யும் கட்டளை தலைமையிடம் இருந்து வந்ததா?**

சபாலிங்கத்தை கொல்லும் கட்டளை தலைமையிடமிருந்தே வந்ததாகத்தான் அறிகிறேன். காரணம் சபாலிங்கமும் ஈழபோராட்டத்தின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவர். தமிழ் மாணவர் பேரவையில் இருந்தவர் ஆரம்ப காலத்தில் பிரபாகரனிற்கும் நெருக்கமாக இருந்ததோடு அவரது தலை மறைவு வாழ்க்கை காலத்தில் பரந்தன் உப்பள பகுதியில் பிரபாகரன் மறைந்திருக்க உதவியவர். இவர் பின்னர் பிரான்சிற்கு இடம்பெயர்ந்த பின்னர் ஈழவிடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலம் பற்றி ஒரு ஆவணப் படம் ஒன்றினை தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். இந்த ஆவணப்படம் வெளியா னால் பிரபாகரனின் பெயரிற்கு களங்கம் ஏற்படும் என்பதாலேயே சபாலிங்கத்தை கொலை செய்யும்படி பிரபாகரன் உத்தரவிட்டதாக அறிய முடிகின்றது. இந்த விடயத்தை விபரமாக தராகி சிவராம் தாயகம் பத்திரிகையில் முன்பு எழுதியிருந்தார்.

(தொடரும்...)



# சின்னச் சின்ன...

▶ தேவாரம் பாடும் போதும், தவில் போன்ற தாளக் கருவிகளை இசைக்கும் போதும் கோயில்களில் தாள வகைகள் வளர்க்கப்பட்டன. தாளங்களில் சடங்குத் தாளங்கள் என்று ஒரு வகை உண்டு. சடங்குகளின் போது மட்டும் அத்தாள வகை பயன்படுத்தப்படும்.

இதில் குறிப்பிடத்தக்க தாளம், நவசந்தித் தாளம் ஆகும். "இராக தாளப் பிரஸ்தாரம்" என்னும் அச்சில் வெளிவராத நூல் சுவடியில் நவசந்தித் தாளங்கள் இவை என்று பட்டியல் தரப்பட்டுள்ளது. அவை:-

1. சச்சத்புட தாளம், 2. விஷம தாளம், 3. சம தாளம், 4. கும்ப தாளம், 5. வர்ம தாளம், 6. துகம் தாளம், 7. சதுரஸ்ர திரி-புடை, 8. அனுமத் கும்ப தாளம், 9. சிம்ம நந்தவ தாளம்

("தமிழர் கண்ட தத்துவம்" நூலிலிருந்து)

▶ துதிக்கை, முக்கலி, பண்ணை, சாளை, திருக்கை, கசலி, பசலை, எண்ணெய், கெளுத்தி, பண்ணாங்கு, பழம்பி, மடந்தை, கடந்தை, சம்பான், நெடுத்தி, பஞ்சாலை, கருங்கண்ணி, பறவை, குறவை, அயிரை, வாளை, கோளை, தேளி, மத்தி, இழலை, அயிந்தி, கூனி, மணலி, நெத்திலி, உளுவை, வாலை, ஆரால், ஓரா, ஆயிரை, விரால், சள்ளை, கெண்டை, மயிந்தி இவையெல்லாம் மீன் வகைகள். "முக்கூடல் பள்ளு" நூலில் திரிகூட ராசப்ப கவிராயர் இப்படி மீன் வகைகளைக் குறிப்பிட்டுள்ளார்.

▶ பன்னிரண்டு ஆயுதங்களாவன: 1. தோமரம், 2. கொடி, 3. வாள், 4. குலிசம், 5. அம்பு, 6. அங்குசம், 7. மணி, 8. தாமரை, 9. தண்டம் 10. வில், 11. மழு, 12. வேல் ஆகியன. இவற்றில் வேல் தவிர பதினொரு ஆயுதங்களும் சிவபெருமானால் படைக்கப்பட்ட ஏகாதச (பதினொரு) உருத்திரர்களின் வடிவங்கள் என்கிறது இந்துமதம். இச்சாசக்தி, ஞானசக்கி, கிரியாசக்தி ஆகிய மூன்று சக்திகளின் உருவமாக உள்ளது வேலாயுதம்.

▶ கடைக்குட்டி ஞானிகள் இவர்கள்:
ராம சகோதரர்களில் ஞானி சத்ருக்னன்.
ராவணாதியர்களுள் ஞானி விபீஷ்ணன்.
கௌரவர்களுள் ஞானி விகர்ணன்.
பாண்டவர்களுள் ஞானி சகாதேவன்.
சூரபத்மாதியர்களுள் ஞானி தாரகாசுரன்.
- இவர்கள் அனைவருமே கடைசிப் பிள்ளைகள்.

(வாரியார் அமுத மொழிகளிலிருந்து)

# ஜெனீவாக் கூட்டத் தொடரை ஆவலுடன் எதிர்பார்த்து…!

– சாலையூரான் –




**போ**ரின் முடிவுக்குப் பிறகு நாட்டின் பெரும்பான்மையினர் தேசத்தை நேசிப்பவர்களாக இருப்பார்கள் சிறுபான்மையினரே தேசத்தைக் காட்டிக் கொடுப்பவர்களாக இருப்பார்கள் என்ற ஒரு கருத்து அரசுத் தரப்பில் இருந்து வெளிப்பட்டதைக் கலாநிதி ஜெகான் பெரேரா சுட்டிக்காட்டியிருக்கிறார்.

பெரும்பான்மையினம், சிறுபான்மை இனம் என்ற பதம் இனி இருக்காது. தேசத்தை நேசிக்கும், அவ்வாறே நாட்டைக் காட்டிக் கொடுக்கும் தரப்புக்கள் என்ற வகை இனங்கள் மாத்திரமே என்கின்ற இந்தக் கூற்று எதனைக் குறிப்பிடுகின்றது என்பது ஒரு பிரச்சினையாகவே இருக்கின்றது.

ஏனெனில், அரசாங்கத்தையும், அதன் தலைமைத்துவத்தையும் தண்டிப்பதற்காகவே ஜெனிவாக் கூட்டத் தொடர் இடம்பெறுகின்றது என்றொரு கருத்து தென்னிலங்கைச் சூழலில் சூடுபிடித்திருக்கும் நிலையில், ஜெகான் பெரேரா இந்தத் தகவலைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

தேர்தல் வருகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களின் போதும், தமிழ்க் கூட்டமைப்பினரும் பெரும்பான்மையினருடன் சிறுபான்மையினர் இணைந்து வாழ்வது சாத்தியமில்லை எனக் கூறிக் கொண்டிருக்கின்றார்கள்.

இருதரப்புக்களுமே இவ்வாறு கூறிக்கொண்டிருக்கும் பின்னணியில் இவர்களின் தேர்தல் வெற்றி சாத்தியமாகிறது எனின், அது நாட்டு மக்களின் விருப்பமா, அல்லது அவ்வாறு விரும்ப வேண்டும் என்பது ஒரு விதியாக ஆக்கப்படுகின்றதா என்பதையும் கேட்டுக் கொள்ள வேண்டியிருக்கிறது.

உண்மையில் இவ்வாறானதொரு போக்குக் குறித்து தென்னிலங்கைத் தரப்பில் மட்டுமன்றி, தமிழ்ச் சூழலும் கூட இந்த மாயையில் இருந்து விடுபட முடியாமல் இருப்பதாகவே தெரிகிறது.

அவ்வாறெனின், இதனை வெளிச் சக்திகளும் உணர்ந்து கொண்டு இலங்கை விவகாரத்தைத் தத்தமது நலன்களில் இருந்து கையாளும் என்பதே உண்மையான நிலைமையாக இருக்க முடியும்.

அதுசரி எனின், ஜெனிவாக் கூட்டத் தொடரில் இலங்கைக்குப் பெரும் ஆபத்துக் காத்திருக்கிறது என்பதாக இரு தரப்பாலும் கூறப்படும் செய்தி வலிந்து மேற்கொள்ளப்படும் ஒரு பிரசாரமா எனவும் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

நடைபெற்ற போரில் தேசம் எதிர்கொண்ட இழப்புக்களுக்கு தமிழ் மக்களின் நலன்கள் வேறு, புலிகளின் எதிர்பார்ப்புக்கள் வேறு என்பதான கருத்துக்களும் அரசுத் தரப்பில் இருந்து அப்போது வலுப்பெற்றிருந்தது.

அந்தக் கருத்துச் சரியே ஆயினும், அந்த வெவ்வேறான நலன்களை, எதிர்பார்ப்புக்களை தென்னிலங்கை அரசியல் தரப்புக்கள் முறையாக வகை வேறாக்கம் செய்து அதனை வெளிப்படுத்தத் தவறிவிட்டன.

அவ்வாறே தமிழ்ச் சூழலில் புலிகளின் பெயரால் பிழைப்பு அரசியல் நடத்திக் கொண்டிருந்தவர்கள் புலிகளதும், அவ்வாறே தமிழ் மக்களினதும் வெவ்வேறான எதிர்பார்ப்புக்களை முறையாக வெளிப்படுத்தத் தவறிவிட்டனர்.

இப்போது அதன் பலாபலன்களைப் புலிகளின் அழிவுக்குப் பிறகும் தமிழ் மக்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது என்பது ஒரு தேவையற்ற துன்பமாகும்.

இப்போது புலிகள் இல்லை. ஆனால், தமிழ் சிங்கள இனங்கள் இனி இணங்கி வாழ முடியாது எனக் கூறி இரு தரப்பும் அரசியல் செய்வதற்கான வாய்ப்பான சூழல் தொடர்வதை இரு இனங்களினது மக்கள் சமூகமுமே ஏற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இதுதான் நிலைமை எனில், மக்கள் அன்றாடம் பிழைப்புக்கு வழியை இந்தத் தலைவர்களிடம் கேட்பதிலிருந்து திசைதிருப்பப்பட்டு, வேறு ஆவேசங்களுக்காக பிரிந்துநின்று மோதிக்கொள்வதில் காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பார்கள் எனலாம்.

இதுதான் உண்மையெனில், இனிவரும் ஜெனிவாக் கூட்டத் தொடர்களிலும் அரசு அம்பலப்படும், தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்கும் என்பதெல்லாம் தொடர்கதையாகவே இருக்கும்.

# 84ஆம் ஆண்டில் சென்னையில்….

– நடேசன் கட்டுரையிலிருந்து.

**ப**ரந்தாமன் என்ற ஞானத்தின் அழைப்பின் பேரில் எபிக்(epic) என்ற ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் தகவல் நிலையத்திற்கு சென்றேன். கோடம்பாக்கம் சூளைமேட்டில் ஒரு கட்டிடத்தின் மேல்மாடியில் அது அமைந்திருந்தது. அங்கிருந்தவர்கள் இனிய முகத்துடன் தோழர் என வரவேற்றது மட்டுமல்லாமல் அன்று இரவு சாப்பாடும் தந்தார்கள்.

ஐந்து தமிழ், ஆங்கில பத்திரிகைகள் மற்றும் நிறைய புத்தகங்கள் இருந்தன. இரண்டு மணிநேரம் அங்கு இருந்து விட்டு வெளியே வந்தபோது வாசலில் நான் கழற்றிப் போட்ட செருப்பைக் காணவில்லை. மற்றவர்களது செருப்பை எடுக்கவும் மனமில்லாமல் வெறும் காலோடு ஆற்காடு ரோட்டில் அரைக்கிலோ மீற்றர் சென்று புதிய றப்பர் செருப்பை வாங்கி அணிந்து கொண்டு அறைக்கு வந்து சேர்ந்தேன்

செருப்பை பறி கொடுத்தாலும் தோழமையான அந்த இடம் என்னைக் கவர்ந்து விட்டது. மேலும் எனது பால்யகால நண்பரான குஞ்சி - நீ எப்பொழுதும் இங்கு வரலாம் எனச் சொல்லியிருந்தார். தொடர்ச்சியாக புத்தகத்தை வாசித்துக்கொண்டு இருந்துவிடுவேன். அந்த இடத்தில் பேசுவதற்கு துணையும் வாசிப்பதற்கு புத்தகங்களும் எனது முக்கியமான கவர்ச்சியாக இருந்தன.

சில இரவுகள் அங்கு (எபிக்கில்) படுத்தும் உள்ளேன். அழுக்கான தலையணைகளை போட்டுக்கொண்டு தரையில் படுத்துவிடுவேன். நடு இரவில் எழும்பியபோது தலைக்கு கீழ் இருக்கும் தலையணை காணாமல் போய்விடும். சுற்றியுள்ள சுவரில் உள்ள கார்ல் மார்க்ஸ், லெனின், ஸ்ராலின் உருவப்படங்கள் எப்பொழுது நீ கம்யூனிஸ்டாக மாறுவாய் என முறைத்தபடி இருந்தன.

என்னைப் பொறுத்தவரை கம்யூனிசத் தத்துவங்களை படித்தறிய முடிந்த இடம் அந்த எபிக்கேயாகும். அவுஸ்ரேலியா வரும்வரைக்கும் அக்காலத்திலே மாவோ ஸ்ராலினை உலக வரலாற்றில் மாபெரும் கொலைகாரர்களாக இனங்கண்டு கொண்டாலும் லெனின்மீதும் கார்ல் மாக்ஸின் பாலும் இளம்சிவப்பு அபிமானம் இருந்தது.

84 ஆம் வருடம் வைகாசி மதிய வெயில்வேளை - நான் எபிக்கில் இருந்த போது ரோட்டில் பெரிதாக சத்தம் கேட்டது. மாடிப்படிகளில் இறங்கி எபிக் கட்டடத்திற்கு அருகே உள்ள சிறிய பாதையைப் பார்த்தபோது பல ஈபிஆர்எல்எவ் தோழர்கள் ஒரு முப்பது வயதான மனிதரை மொத்து மொத்தென அடித்தார்கள். அவன் அம்மே, அம்மே என சத்தமிட்டான்.

சிங்கள உளவாளி எனச் சிலர் கூக்குரல் இட்டார்கள். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒரு மனிதனை பலர் அடிப்பதைப் பார்ப்பது இதுவே முதலாவது தடவை.

ஒருவர் - அடிப்பதை நிறுத்திவிட்டு விசாரித்தபோது அந்த மனிதன் மலையாளி எனப் புரிந்தது.

அவன் அம்மே என்றது இவர்களுக்கு அவனை ஒரு சிங்களவராக அடையாளம் காட்டியிருக்கிறது.

இந்தச் சம்பவத்தை அதில் பங்கு பற்றியவர்கள் மறந்திருக்கலாம். ஆனால் என்னால் மறக்கமுடியாத சம்பவம் அந்த அடிவாங்கிய மலையாளத்து மனிதன் மெதுவாக திரும்பி பார்த்தபடி நடந்து போனது - அடித்தவர்கள் அவனிடம் மன்னிப்புக் கேட்டது - அடித்த தோழர்கள் பலர் மனம் நொந்து பேசியது என்பன என்னால் மறக்கமுடியாத காட்சிகள்.

நல்லவேளை அப்பாவியான ஒரு சிங்களவர் அகப்பட்டிருந்தால் அவரது நிலை எப்படி இருக்கும் என்பதையும் அந்தக்கணத்தில் எண்ணிப் பார்க்கவும் மனம் தவறவில்லை.

ஒரு மாலை நேரம் சினிமாவுக்குச் சென்றுவிட்டு ஒரு நாள் எபிக்கிற்கு போனபோது மிகவும் தலையிடியாக இருந்தது. அங்கிருந்த தோழர்களிடம் தலைவலி மருந்து கேட்டேன்.

எல்லோரும் இல்லை என்று சொன்னார்கள்.

அப்போது ஆறடி உயரமான நெய்யில் வளர்ந்த செழிப்பான உடலுடன் ஒருவர் சிரித்தபடி வந்தார். எனது வயதுதான் இருந்தாலும் - அவரது உடலும் புன்னகையும் அவரை மதிப்புக்குரிய மனிதராக உயர்த்தி விட்டது.

இயக்கத்தவர்கள் எல்லோரும் மெலிந்தவர்கள். அதுவும் ஈழமக்கள் புரட்சிகர முன்னணியினர் நித்திய பஞ்சத்தில் வாழ்ந்தவர்கள் போன்ற தோற்றம் உடையவர்கள். மேலும் அவர்களுக்கு கிடைக்கும் உணவை நான் பார்த்திருக்கிறேன்…. நிச்சயமாக இந்த மனிதர் அவர்களில் ஒருவராக இருக்க முடியாது என்பதை எனது உள்ளுணர்வு சொல்லியது.

அந்த செழிப்பான மனிதர் இதோ நான் மருந்து தருகிறேன் எனக் கூறிவிட்டு ஏதோ வெள்ளைப்பசையை எடுத்து எனது நெற்றியில் சூடு ஏறத் தேய்த்தார். நானும் மனிதர் ஏதோ வைத்தியம் தெரிந்தவர் என நினைத்து அவர் தேய்த்தபின்னர் எனது அறைக்குச் சென்று படுத்து விட்டேன். நிச்சயமாக தலையிடி குறைந்துவிட்டதாக உணர்ந்தேன்.

அடுத்த நாள் நான் எபிக்கிற்கு சென்ற போது முதல்நாள் நான் சந்தித்த அதே மனிதர் வந்து “எப்படி தலையிடி?” என்றார் சிரித்தபடி.

“ஏதோ உங்கள் புண்ணியத்தில் இரவு தூங்க முடிந்தது”

“நான் உங்களுக்கு நெற்றியில் தடவியது சிக்னல் பற்பசை” என சிரித்து விட்டு தனது பெயர் விசாகன் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் படித்தேன் என அறிமுகமானார். அவருடன் அன்று அவரது பல்கலைக்கழக நண்பனான மகேஸ்வரராஜாவும் சேர்ந்து கொண்டார்.


அடுத்த நாள் எக்மோரில் உள்ள ஒ. .பர் அலுவலகத்திற்குப் போன போது மாஸ்டர் - “ஏன் இவ்வளவு நாளும் வரவில்லை?” எனக் கேட்டார்.

“ஞானத்தின் ஆட்களோடு அவர்கள் இடத்திற்கு போய் வந்தனான்” என்றேன்.

“அவன்கள் சரிப்படான்கள். அவன் நாபா மட்டும்தான் நல்ல மனுசன். இவன்கள் தேவையில்லாத கம்யூனிசம் பேசிக்கொண்டு நேரத்தை வீணாக்குகிறார்கள். புலியளைப் பார் - அவர்கள் இந்த மாக்சிசம், கம்யூனிசம் என்று ஏதாவது பேசுகிறார்களா? அவங்களுக்கு தெரியும் சிங்களவருக்கு எங்கேயடித்தால் விடயம் நடக்கும் என்று” - என்று மாஸ்டர் பேசிய விடயங்கள் புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தன.

ஆனால் புலிகளின் போக்கு சரி என என்னால் எண்ண முடியவில்லை. என்னைப் பொறுத்தவரை ஆயுதப்போராட்டத்தை மறுக்க முடியாதபோதிலும் மனிதாபிமானமான விடயங்களில் ஈடுபடுவது சாலச்சிறந்தது என நினைத்தேன்.

## கருத்துப் படம்






# மூடுபனி



மூடுபனி என்பது உண்மையில் மேகம்தான். நுண்ணிய நீர்த்துளிகளால் உருவானது. மேகங்கள் நீராவியினால் ஆனவை. மூடுபனி மேகத்திற்கும் மூடு பனிக்கும் உள்ள ஒற்றுமை மேகங்கள் மேல்நோக்கிச் செல்லக்கூடியவை.

மூடுபனியோ பூமியை நோக்கி வந்து படிந்து விடக்கூடியது. போக்மிஸ்ட் என்று ஆங்கிலத்தில் கூறப்படும் இரண்டுமே மூடுபனிதான். மூடுபனி வெளுப்பாக இருக்கும் என்றுதான் நாமெல்லாம் சாதாரணமாக எண்ணுவோம். ஆனால், மூடுபனி எப்போதும் எல்லா இடங்களிலும் வண்மையாகவும், சுத்தமாகவும் இருக்காது.

# திறமை வாய்ந்தவை

வண்ணத்துப் பூச்சி, மினுக்கட்டான் பூச்சி, மின் மினிப்புழு முதலியவை தமது ஒளியைத் தாமே உண்டு பண்ணிக் கொள்கின்றன.

சில வகையான வண்டுகளும், பக்டீரியா என்னும் நுண்ணிய பூச்சிகளும்கூட ஒளிரும் சக்தியுடையவை. அவை வெளியிடும் ஒளி மிகச்சிறிய அளவுதான் என்றபோதிலும், அவை தம் சக்தியில் 2 சதவீதத்தையே ஒளிக்கென்று உபயோகிக்கின்றன என்பதை எண்ணும்போது மனிதன் பெருமை கொள்ளும் மின்சார விளக்கைவிட அவை எவ்வளவோ அதிகத் திறமை வ்ாய்ந்தவை என்பது விளங்கும்.

# அலைகள்



கடலில் அலைகள் தோன்றுவதைப் போலவே ஏரிகளிலும், குளங்களிலும், கிணறுகளிலும் அலைகள் ஏற்படுவதுண்டு. ஆனால், இவற்றில் காணப்படும் அலைகள் வேகம் குறைந்த சிற்றலைகளாக, சக்தி குறைந்தவைகளாக இருக்கும்.

நீரின் கொள்ளளவிற்கும் பரப்பளவிற்கும் ஏற்பவே அலைகளின் வேகமும் சக்தியும் அமைகின்றன.காற்று வேகமாக வீசும்போதும், புயலின் போதும் அலைகள் உயரமாக ஏற்படும். அலைகள் உருவாக, காற்றை விட வேறு சில காரணங்களும் உள்ளன.

வானில் உள்ள சூரியனும் சந்திரனும் பூமியைத் தம்பால் ஈர்க்கின்றன. இந்த ஈர்ப்பு விசையே அலைகள் உருவாகக் காரணமாகின்றது. பௌர்ணமி, அமாவாசை நாட்களில் கடலில் பேரலைகள் ஏற்பட்டு கடல் கொந்தளிப்பு உண்டாகும்.

இதற்குக் காரணம், பௌர்ணமி, அமாவாசை நாள்களில் சூரியனின் ஈர்ப்பு விசையும் சந்திரனின் ஈர்ப்பு விசையும் ஒரேநேரத்தில் அமைவதால் அலைகளும் பெருமளவில் தோன்றுகின்றன. இந்த நாட்களில் தென்னை மர உயரத்திற்குக்கூட கடல் அலைகள் எழும்புவது உண்டு.

நில அதிர்ச்சி உண்டாகும்போதும், பூகம்பம் ஏற்படும் போதும், கடலுக்கு அடியில் உள்ள எரிமலைகள் வெடிக்கும்போதும் கடல் கொந்தளிப்பு ஏற்படும். அப்போது, கடல் அலைகளின் எழுச்சியும் அதிகமாக இருக்-கும்.கடல் அலைகளைக் கொண்டு மின் உற்பத்தி செய்யும் அறிவியல் நுட்பம் கண்டறியப்பட்டுள்ளது.

# உயரமான ஏரி



தென்னமெரிக்காவின் ஆண்டெஸ் மலையில் அமைந்துள்ள டிட்டிகா ஏரிதான் உலகத்திலேயே மிக உயரமான ஏரியாகும். இது கடல் மட்டத்திலிருந்து 4,000 மீற்றர் உயரத்தில் உள்ளது.

பெரு நாட்டில் ஏரியின் பெரும்பகுதியும் பொலிவியா நாட்டில் ஏரியின் சிறிய பகுதியும் அமைந்துள்ளன. 220.8 கிலோ மீற்றர் நீளமும் 110.4 கிலோ மீட்டர் அகலமும் கொண்டு திகழ்கிறது. பல ஆறுகள் ஏரியில் வந்து கலக்கின்றன.

டெஸ்கவுடெரா என்னும் ஆறு மட்டும் இந்த ஏரியிலிருந்து புறப்படுகிறது. மேலும், சன், மூன் போன்று பல தீவுகளையும் உள்ளடக்கியுள்ளது. கடல் மட்டத்திலிருந்து அதிக உயரத்தில் அமைந்திருப்பதால், பூமத்திய ரேகைக்கு மிக அருகில் இருந்தும் கோடைகாலத்தில் அமெரிக்காவில் உள்ள மற்ற எல்லா ஏரிகளையும்விட குளிர்ந்து இருக்கிறது.

ஏரியின் சுற்றுப்புறச் சூழ்நிலை வறண்டே காணப்படுகிறது. இதற்கான காரணம் தெரியவில்லை. ஏரி யின் கரையோரங்களில் காணப்படும் சில மர்மமான அழிவுச் சின்னங்களைப் பற்றி ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

# பெப்ரவரியில்...



1873 பெப்ரவரி 2
நாடகத் தந்தை
பம்மல் சம்பந்த (முதலியார்)
பிறந்தார்



1969 பெப்ரவரி 3
அறிஞர் அண்ணா
மறைந்தார்



1970 பெப்ரவரி 3
பெர்ட்ரண்ட் ரசல்
மறைந்தார்



1974 பெப்ரவரி 4
ஜி.டி.நாயுடு
மறைந்தார்



1976 பெப்ரவரி 10
கா.நமச்சிவாயம்
பிறந்தார்



1908 பெப்ரவரி 11
ஜி.யு.போப்
மறைந்தார்



1809 பெப்ரவரி 12
ஆபிரகாம் லிங்கன்
பிறந்தார்



1860 பெப்ரவரி 18
ம.சிங்காரவேலர்
பிறந்தார்



1937 பெப்ரவரி 18
டாக்டர் சி.நடேச (முதலியார்)
பிறந்தார்



1933 பெப்ரவரி 26
சிவகங்கை எஸ்.இராமசந்திரனார்
மறைந்தார்



யாழ். மாவட்ட செயலகத்தில் காணி, காணி அபிவிருத்திஅமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தலைமையில் காணி சம்மந்தமான அவசர கூட்டமொன்று நேற்று நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் யாழ். அரச அதிபர், காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், பிரதேச செயலர்கள், படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டிருப்பதனைக் காணலாம். (படம்:- பார்த்தீபன்)

# சேதமடைந்த இந்து ஆலயங்களின் விபரங்களை சமர்ப்பிக்குமாறு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள இந்து ஆலயங்களில் யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட இந்து ஆலயங்கள் தொடர்பான விபரங்களை அகில இலங்கை இந்து மாமன்றம் கோரியுள்ளது.

யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்து பாதுகாப்பு வலயங்களுக்குள்ளோ வெளியேயோ அமைந்த ஆலயங்களுக்கு நஷ்டஈட்டை பெற்றுக் கொடுக்கும் வகையில் இஇந்துமாமன்றம் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

அவ்வாறு சேதமடைந்த ஆலயங்கள் தொடர்பான விபரங்களை ஆலய நிர்வாகத்தினர் அகில இலங்கை இந்து மாமன்றம், இலக்கம் 91/5 சேர் சிற்றம்பலர் ஏ.கார்டினர் மாவத்தை, கொழும்பு - 02 என்ற முவரிக்கு எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன்னர் காலம், சேதவிபரம், மதிப்பீடு தொடர் கொள்ள வேண்டிய விபரம், பதிவு இலக்கம் போன்ற விபரங்களை அனுப்பி வைக்குமாறு இந்து மாமன்றம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

## நெல்லை களஞ்சியப்படுத்துவதில் சிரமத்துக்குள்ளாகும் விவசாயிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் முரசுமோட்டை பகுதியில் நெற்களஞ்சியம் ஒன்று இல்லாமையால் இப்பிரதேச விவசாயிகள் நெல்லைக் களஞ்சியப் படுத்துவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கின்றனர்.

இம்மாவட்டத்தில் குறிப்பாக முரசுமோட்டை, ஊரியான், கோரக்கன்கட்டு ஆகிய பிரதேசங்களிலேயே அதிகளவான நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்ற நிலையில் இப்பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகள் நெல்லை வேறு களஞ்சியங்களுக்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளதுடன் குறைந்த விலைகளில் விற்பனை செய்யவேண்டிய நிலையும் காணப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இங்குள்ள விவசாயிகள் அறுவடைசெய்கின்ற நெல்லை உரியவகையில் களஞ்சியப்படுத்துவதற்கு ஏதுவாக பொதுவான இடம் ஒன்றில் நெற்களஞ்சியம் ஒன்றை அமைத்துத்தருமாறு இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (கே)

## பரந்தன் தபாலக புதிய கட்டடம்; திறந்துவைக்க நடவடிக்கை

கிளிநொச்சி பரந்தன் பிரதான தபால் அலுவலகத்தின் புதிய கட்டடப் பணிகள் நிறைவுற்ற நிலையில் இத்தபாலகம் மிக விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாக பரந்தன் தபாலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பரந்தன் பிரதான தபாலகம் கடந்த யுத்த காலத்தினால் சேதமடைந்து காணப்பட்டநிலையில் குறித்த தபாலகம் தொடர்ந்து தனியார் வீடொன்றில் பெரும் சிரமங்களிற்கு மத்தியில் இயங்கி வந்தது.

இதனையடுத்து கடந்த 2011ஆம் ஆண்டு இத்தபாலகத்திற்கான புதிய கட்டடம் ஒன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ள போதும் இத்தபாலகம குறித்த தனியார் வீட்டிலேயே இயங்கி வந்தது.

இந்நிலையில் இத்தபாலகத்தின் புதிய கட்டடம் இதுவரை திறக்கப்படாமை தொடர்பாக பரந்தன் தபாலக அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, குறித்த தபாலகத்தின் பணிகள் நிறைவடைந்து தங்களிடம் கையளிக்கப்பட்டிருப்பதாகவும் இத்தபாலகம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாகவும் குறித்த அதிகாரி தெரிவித்துள்ளார். (கே)

# ஆலய வழிபாட்டுக்கு வருவோர் ஆசார சீலர்களாய் வரவேண்டும்

## கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன் தெரிவிப்பு

புனிதப் பிறவியாக மனிதப்பிறவி எடுத்த ஒவ்வொரு வரும் பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்தவர்களாவர் ஆகவே இந்த உடலில் உயிர் இருக்கும் போதே நல்லனவற்றையெல்லாம் செய்து விட வேண்டும்.அத்துடன் ஆலயம் புனிதமானது அந்த ஆலய வழிபாட்டுக்கு வருவோர் ஆசார சீலர்களாய் வர வேண்டும் அது பாரம்பரிய சம்பிரதாய பூர்வமான நல்ல வழக்கமாகும் என கலா பூஷணம் இராசையா ஸ்ரீதரன் தெரிவித்தார். கடந்த புதன்கிழமை அரியாலை அண்ணமார் ஆலயத்தில் நடைபெற்ற இந்து இளைஞர் மன்றத்தினரின் வைரவ சாந்தியை முன்னிட்ட கலை விழாவில் கலந்து கொண்டு சிறப்பு சொற்பொழிவாற்றிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

மேலும் இந்நிகழ்வில் பாடும்பணி என்னும் பொருளில் உரையாற்றிய அவர் தொடர்ந்து பேசுகையில்,

மனித வாழ்க்கையில் ஆலய வழிபாடு மிக முக்கியமானது ஒவ்வொரு நாளும் வழிபாடியற்ற முடியாதவர்கள் செவ்வாய்க்கிழமை வெள்ளிக்கிழமையிலாவது கோவிலுக்கு வர வேண்டும் இறைவன் தந்த நாக்கினாலே அவன் புகழைப் பாட வேண்டும் ஒவ்வொரு நாளும் காலையில் முகங்கழுவி விபூதி பூசி வீட்டிலுள்ள சுவாமி அறையில் ஒரு தேவாரமும் ஒரு புராணமும் பாடுகின்ற பணியை நாங்கள் நிச்சயம் செய்ய வேண்டும். அத்துடன் மாணவர்கள் எதிர்காலத்தில் பிரகாசிக்க நல்லொழுக்கம் பிரதானமாகும். ஒழுக்கமே ஒருவனை உயர்த்தும் ஏணியாகும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நேர்மையான வழியில் வாழப்பழக்க வேண்டும். அப்போது தான் அவர்கள் நற்பண்புமிக்கவர்களாக வருவார்கள் வாழ்க்கையில் எப்போது உண்மையைப் பேசி உத்தமனாக இன்சொல் பேசி இனியவராக வாழ்வதற்கு பழக்கப் படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

இறுதியாக அவர் ஆற்றிய சொற்பொழிவிலேயே வினாக்களை கேட்டு விடையளித்தோருக்குப் பரிசில்களும் வழங்கினார்.

இவரது சொற்பொழிவைத் தொடர்ந்து மாணவச் செல்வங்களின் நடனமும் மற்றும் கலை நிகழ்வுகளும் சிறப்பாக இடம்பெற்று பிரசாதம் வழங்கலுடன் நிகழ்ச்சிகள் நிறைவுக்கு வந்தன.

# பதிவிருக்கப் பெட்டகம்

உன்னை எனக்குப் பிடித்திருந்தது
உன்னை நான் எடுத்துக்கொண்டேன்
எனக்கு இதைப்பற்றிச் சொல்ல
இதற்குமேல் ஒன்றுமில்லை.
மேலும் - பலி பீடத்தில்
என் தலைக்கு மேல்
வாள் உயர்த்தி நிற்பவனிடம் சொல்
உன்னிடத்தும் சரி
அவனிடத்தும் சரி
எனக்கு
வேறெந்தத் தேர்வுமே
இருக்கவில்லையென்று.
**- மனுஸ்யபுத்திரன**

கட்டுப்படுத்த முடியாத
ஆசையின் மீது
கட்டுப்படுத்த முடியாத
ஆசை வைப்பதே
காதல்!
**- மார்க் ட்வைன்**

வண்ணமென்றால்
எனக்கு அடர்நீலம்
உனக்குக் கிளிப்பச்சை
எண்ணமென்றால்
எனக்கு உலகமே வீடு
உனக்கு வீடே உலகம்
அன்பென்றால்
எனக்கு நீ
உனக்குக் குழந்லதகள்..
எப்படியோ போ..
**- ராகவன் சிறினிவாசன**

வயோதிகம் மறித்தது நடுவழியில
நான் காதலைத் தேடி
சென்று கொண்டிருந்த போது.
'விடு என்னை
இப்போது தான் உணர்ந்து
கொண்டேன் காதலின் அருமையை'
என்று அதன் காலில்
விழுந்து கெஞ்சினேன்.
'சற்று முன் நான் வயோதிகம்
இப்போதோ மரணம்' என்று
என்னை இறுகத்
தழுவிக் கொண்டது
அது. **- சுந்தர ராமசாமி**

நீயும் நானும் எதிலும்
ஒத்துப்போனதில்லை
சாதாரணமாய்
ஆரம்பித்தாலும்
சண்டையில்தான்
பேச்சு முடியும்
நம் விருப்பங்களும்
நேர்எதிர்தான்
இருந்தும்...
நம்மை இழுத்துப்பிடித்து
சுவாரசியமாய்
வாழ வைக்கிறது காதல்.
**- மதுமதன்**

ஆடும் கொடிய நாகங்களும்
அசைந்து வரும் நேரம் உன்
அழகு முகம் கண்டுகொண்டால்
அன்பு கொண்டு மாறும்.
**- கண்ணதாசன்**

தனியாய் வெளிறிப் போய் அலையும் போர் வீரனே
உன்னை வாட்டுவது என்ன?
ஏரியின் செட்ஜ் புற்கள் காய்ந்து போயின
பறவைகள் மௌனமாயின

துரதிர்ஷ்டம் பீடித்தவனாய் தளர்ந்து தோன்றும்
போர்வீரனே அப்படி உன்னை என்ன ஏங்க செய்கிறது?
அணிலின் பொந்து நிறைந்து வழிகிறது,
அறுவடை முடிந்து விட்டது

பதற்றத்தின் ஈரமும் ஜ"ரத்தின் பனித்துளிகளும் கொண்டு
லில்லி மலர் போல் வெளுத்துப் போய் விட்டது உன் நெற்றி
உன் கன்னத்தில் ஒரு வாடிய ரோஜாவின் தோற்றம்
வேகமாய் காய்ந்து சருகாகும் ரோஜாவின் தோற்றம்

புல்வெளியில் ஒரு பெண்ணைப் பார்த்தேன்,
தீராத அழகு - தேவதையின் மகள், நீள்கூந்தல்,
காற்றில் மிதக்கும் கால்கள், ஆவேசக் கண்கள்.
அவள் அணிய ஒரு மலர்க்கிரீடம் செய்தேன்,
கையணிகளும் பூக்களாலே செய்தேன்,
அவளை வாசத்தின் வளையத்தில் வைத்தேன்
என்னோடு சேர்கையில் கண்களையே பார்த்தாள்
இனிமையாய் முனகினாள்.

விரையும் என் புரவியில் வைத்தேன் அவளை,
பகல் எல்லாம் என் கண்முன் வேறேதையும் காணேன்
சதா அவள் பக்கவாட்டாய் சாய்ந்து என்னை நோக்கி
தேவதைப் பாடல்கள் பாடி வந்தாள்.

இனிய கிழங்கு, காட்டுத்தேன் பனித்த அமிழ்தும் தந்தாள்
பின் ஒரு விநோத மொழியில்
தன் உண்மைக் காதலைச் சொன்னாள்.

மனம் லயித்து தூங்கச் செய்தாள்
அப்போது ஒரு கனவு வந்தது- கொடூரமான கனவு
குளிரில் உறையும் மலைச்சரிவில் சமீபமாய் நான் கண்டேன்
அக்கனவில் வெளிறிய அரசர்களையும் இளவரசர்களையும்,
மரண சோகை அவர்களிடம் கண்டேன்,
அவர்கள் கத்தினர் "கருணையற்ற அந்த பெண்ணின்
வசியத்தில் கட்டுண்டு இருக்கிறாய்"
அவர்களின் பட்டினி உதடுகளை அந்தி ஒளியில் கண்டேன்
குரூரமான எச்சரிக்கை அகலமாய் பிளந்து தோன்ற.

விழித்துப் பார்க்கையில் இங்கு
குளிர்ந்து உறையும் மலைச்சரிவில் நான்.

அதனாலே நான் அலைகிறேன் தனியாய் சோகையாய்
செட்ஜ் புல் சருகாகி வந்தாலும்
பறவைகள் பாடலை மறந்தாலும்
**- கீட்ஸ்**

# போதனாவைத்தியசாலை அபிவிருத்திக்கு சிறப்பு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையின் எதிர்கால அபி விருத்தி மற்றும் மேம்பாட்டுக் காக சிறப்பு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி யின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவா னந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள அமைச்சரின் செயலகத் தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற யாழ்.போதனா வைத் தியசாலையில் கடமையாற்றும் சுகாதார தொண்டர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

யாழ்.போதனா வைத்திய சாலையின் நிரந்தர ஊழியர் களாக உள்வாங்குவதில் சுகா தார அமைச்சும் மிக இறுக் கமான கட்டுப்பாடுகளை முன் னெடுத்து வருகின்றது.

இந்நிலையில் தற்போது இலங்கை செஞ்சிலுவைச் சங் கம் மற்றும் சென்.ஜோன்ஸ் அம் புலன்ஸ் படைப்பிரிவு ஆகிய வற்றைச் சேர்ந்த சுகாதார தொண் டர்கள் தற்காலிக அடிப்படை யில் பணியாற்றி வரும் நிலை யில் அவர்களது வாழ்வாதா ரத்தை கருத்தில் கொண்டு மகேஸ்வரி நிதியத்தின் ஊடாக மாதாந்த ஊதியத்தை வழங்க நாம் தீர்மானித்துள்ளோம்.

அதனடிப்படையில் தான் இவ்வாறு பணியாற்றும் 190 பேருக்கு நாளொன்றுக்கு 175 ரூபா வீதம் மகேஸ்வரி நிதி யத்தின் ஊடாக வழங்கவுள்ள தாகவும், குறித்த தொண்டர்கள் மாற்றுத் தொழிலொன்றை பெற் றுக் கொள்ளும் வரையில் இவ் வாழ்வாதார உதவீ கிடைக்கும் என்பதுடன் எதிர்காலத்தில் இவ் உதவித் திட்டத்தை அதி கரிக்க எண்ணியுள்ளதாகவும் இது கட்சியின் மக்கள் சேவைக் கான மற்றுமொரு பணியென வும் அமைச்சர் சுட்டிக்காட்டி னார்.

இந்நிலையில் நீங்கள் எல் லோரும் உங்களது கடமை களையுணர்ந்து வைத்தியசா லைக்கு வருகைதரும் நோயா ளர்களுடனும் மக்களுடனும் மனித நேயத்துடன் நடந்து கொள்ள வேண்டும் நீங்கள் துஷ்பிர யோகங்களுக்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாது என்பதுடன் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு கீழ்ப்படிந்து நடக்கும் அதே வேளை, ஒருவருக்கொருவர் மதிப்பளிக்க வேண்டும்.

உங்களுக்கான வளமான சந்தோசமான எதிர்காலத்தைப் பெற்றுக் கொடுப்பதே எனது நோக்கம் தவறான வழிநடத்தல் களுக்கு ஒருபோதும் இடமளிக் கக் கூடாது.

அத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையின் எதிர்கால மேம்பாடு மற்றும் அபிவி ருத்திக்காக பல்வேறு சிறப்பு வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுக்கவுள்ள நிலையில் அனைவரும் ஒன்றிணைந்த ஒத்துழைப்பை வழங்க வேண் டும் என்றார்.

இதில் சுகாதார தொண்டர்க ளுக்கான உதவிக் கொடுப்பன வுகள் வழங்கி வைக்கப்பட் டன.

இதன்போது யாழ்,போதனா வைத்தியசாலையின் அபி விருத்தி குழு செயலாளர் இரா. செல்வவடிவேல், அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப் பாளர் கே.வி.குகேந்திரன், ஈ.பி. டி.பியின் சுவிஸ் பிராந்திய முக் கியஸ்தர் திலக், ஈ.பி.டி.பியின் வடமராட்சி இணைப்பாளர் ஶ்ரீரங்கேஸ்வரன், மகேஸ்வரி நிதியத்தின் இணைப்பாளர் ரஜீவ் ஆகியோர் உடனிருந்த னர்.


# காட்டுத்தீயை கட்டுப்படுத்த சுற்றாடல் அமைச்சு புதியதிட்டம்

(கொழும்பு)

காடுகளில் தீ பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக விசேட திட்டமொன்று ஆரம்பிக்கப்பட் டுள்ளதாக சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தை காடுகளை அண்மித்த பகுதிகளில் வாழும் மக்களின் ஒத்துழைப்புடன் நடை முறைப்படுத்தவுள்ளது இதே வேளை, அண்மைக்காலங்களில காடுகளில் ஏற்பட்ட தீயினால் அங்கு நீர் நிலைகள் அழி வடைந்துள்ளதாக இடர் முகா மைத்துவ நிலையம் தெரிவித் துள்ளது.

நல்லதண்ணி, ஹந்தானை மற்றும் கேகாலை ஆகிய பிரதேசங்களிலுள்ள பெருமளவு



காடுகள் தீயினால் அழிவடைந் துள்ளதாக இடர் முகாமைத்துவ உதவி பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார். காடு களில் தீ பரவுவதை கட்டுப் படுத்துவதற்கு மக்கள் அதிக ளவு ஒத்துழைப்பு வழங்க வேண் டியது அவசியம் எனவும் இடர் முகாமைத்துவ நிலையம் குறிப் பிட்டுள்ளது.

# சவுதியிலுள்ள பணியாளர்கள் 24 மணிநேரமும் முறையிடலாம்

சவுதி அரேபியாவிலுள்ள இலங்கையர்கள் முறையிடுவதற்கு 24 மணித்தியால தொலைபேசி சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவில் பணியாற்றுகின்ற இலங்கையர்கள் தங்களின் பிரச்சினைகளை முறையிடுவதற்கு 24 மணித்தியால தொலைபேசி சேவை ஒன்றை அடுத்து வாரம் முதல் அறிமுகம் செய்யவுள்ளது.

எனவே சவுதி அரேபியாவில் பணியாற்றும் இலங்கையர்கள் தாம் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக 800 11 800 50 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு முறைப் பாடுகளை செய்யமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மதுசாலையை அகற்றக்கோரி ஆர்ப்பாட்டம் நடாத்தத்திட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் பெரி யகடை கிராமத்தில் மக்கள் குடி யிருப்புகளுக்கு மத்தியில் தனி யார் ஒருவரின் வீட்டில் திறக் கப்பட்டுள்ள மதுபானசாலையை அகற்றுமாறு கோரி எதிர்வரும் 17ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாக பெரியகடை மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ரி.இன்பராசா தெரி வித்துள்ளார்.

பெரியகடை மீனவர் கூட்டு றவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் பெரியகடை பொது மண்டபத் தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இது தொடர்பான பிரச்சினை களை கண்டறிந்து தீர்ப்பதற் காக 12 பேர் அடங்கிய குழு வொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மதுபானசாலை கடந்த 06ஆம் திகதி திறக்கப் பட்டுள்ளது. இதனால், பெரிய கடை கிராம மக்கள் அச்ச நிலையில் இருப்பதுடன், இங்கு கலாசாரச் சீரழிவுகள் ஏற் படுவதற்கு வாய்ப்புள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 33 பிச்சைக் காரர்கள் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பில் பொது இடங்களில் பிச்சை எடுத்த 33 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு ஒன்பது மணி தொடக்கம் சுமார் மூன்று மணித்தியாலங்கள் நடாத்தப்பட்ட தேடுதல் நடவடிக் கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 7 பெண்களும் அடங்குகின்றனர். இத்தேடுதல் நடவடிக்கை புறக்கோட்டை, மருதானை, மாளி காவத்தை, வாழைத்தோட்டம், கொம்பனித்தெரு ஆகிய பொலிஸ் நிலையங்களின் பங்களிப்புடன் நடாத்தப்பட்டுள்ளது.

# மனிதக் கழிவிலிருந்து மன்னாரில் பசளை உற்பத்தி

மனிதக் கழிவிலிருந்து பசளை உற் பத்திசெய்யும் அபிவிருத்தி வேலைத் திட்டம் ஒன்று மன்னாரில் முன்னெடுக் கப்பட்டு வருகிறது.

மனிதக் கழிவு நீரை சுத்திகரிக்கும் இயந்திர தொகுதி குறித்த செயற் பாட்டிற்காக பயன்படுத்தப்படவுள்ளது.

உலர்வலய நகர நீர் மற்றும் சுகா தார செயற்றிட்டத்திற்கு அமைவாக நடைபெற்று வரும் குறித்த வேலைக ளுக்கான நிதியினை இலங்கை அர சாங்கம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிகள் இணைந்து செயற்படுத்திவரு கின்றன.

இதற்கென 67 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு அபிவிருத்திப்பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகிறது.


மனிதக் கழிவு பொருட்களிலிருந்து பசளை தயாரிக்கும் திட்டம் வடமாகா ணத்தில் மன்னார் மாவட்டத்திலேயே முதல் முதலாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. கடந்த வருடம் யூலை மாதம் ஆரம்பிக்கப்பட்ட குறித்த அபிவிருத்தி வேலைகள் எதிர்வரும் யூலை மாதம் வரையிலான ஒருவருடகாலம் நடை பெறவுள்ளது.

மன்னார் நகரசபைக்குட்பட்ட பகுதிக ளில் எடுக்கப்படும் மனிதக் கழிவுகளை அப்புறப்படுத்தி வேறு இடத்தில் போடு வதில் சுகாதாரம் உட்பட பல சிக்கல்கள் காணப்பட்டன.

இந்நிலையினை கருத்திற் கொண்டே குறித்த மனிதக் கழிவுகளை வடிகட்டி பதப்படுத்தி பசளையாக தயாரிக்க நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சுற்றுச் சூழலுக்கும் சுகா தாரத்திற்கும் பாதிப்பில்லாமல் குறித்த மனிதக் கழிவுகளை அகற்றி அதன் மூலம் கிடைக்கப்பெறும் பசளையினை மன்னார் மாவட்டம் உட்பட ஏனைய மாவட்டங்க ளுக்கும் ஏற்றுமதி செய்து கிடைக்கப் பெறும் நிதியின் மூலம் மேலும் பல அபிவிருத்திப் பணிகளுக்குச் செலவிடுவ தற்கு மன்னார் நகரசபை திட்டமிட்டுள்ளது.

இதற்கென மன்னார் திருக்கேதீஸ் வரத்தை அண்மித்த பகுதியிலுள்ள ஏ32 பிரதான வீதிக்கருகாமையில் அமைந் துள்ள பாப்பா மோட்டை எனுமிடத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.




குறித்த பகு தியில் 1.75 ஹெக் ரேயர் நிலப்ப ரப்பில் இதற் கான வேலைத் திட்டம் முன் னெடுக்கப்பட்டு வருகிறது. இதன் படி குறித்த பகு தியில் பசளை தயாரிப்பிற் கென விசாலமான தொட்டிகள் அமைக்கப்ப டுகிறது.

இதன்படி 53 மீற்றர் நீளமும் 38 மீற்றர் அகலமும் கொண்ட தொட்டி ஒன்றும், 24 மீற்றர் நீளமும் 12 மீற்றர் அகலமும் கொண்ட தொட்டி ஒன்றும், 18 மீற்றர் நீளமும் 10 மீற்றர் அகலமும் கொண்ட தொட்டி ஒன்றும் அதேபோன்று 8 மீற்றர் நீளமும் 7 மீற்றர் அகலமும் கொண்ட இரண்டு தொட்டிகளும் அமைக்கப்பட்டு வருகிறது. குறித்த கட்டுமானப்பணிகள் முடிவடைந்தபின் பசளை உற்பத்தி வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வுள்ளது. இதன்மூலம் மன்னார் மாவட்ட இளைஞர்களுக்கு வேலை வாய்ப் புகளும் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. குறித்த வேலைத் திட்டத்தினை முதல் இரண்டு வருடங் களுக்கு தேசிய நீர் வடிகாலமைப்பு அதிகார சபை பராமரிப்பதோடு அதன் பின் மன்னார் நகர சபைக்கு வழங் கப்பட்டு பராமரிக்கவுள்ளது.


22) ஓர் இடையன் ஆடுகளையும் கோழிகளையும் உணவுக்காக வெளியே எடுத்துச் சென்றான். அவள் எடுத்துச் சென்ற பிராணிகளின் மொத்த கால்களின் எண்ணிக்கை 24 ஆகும். இவற்றில் கோழிக்குஞ்சுக்கால்கள் 8 ஆகும். அவன் உணவுக்காக எடுத்துச் சென்ற ஆடுகள் எத்தனை?

---

23) 

கேத்திர கணித பலகை ஒன்றில் அறையப்பட்டுள்ள ஆணிகள் சுற்றி இறப்பர் பட்டி ஒன்றினால் சுற்றப்பட்டுள்ள வடிவத்தை உரு காட்டுகிறது ஆணிகளுக்கு இடையே உள்ள தூரம் 1 cm எனில்இவ்வடிவத்தின் பரப்பளவு யாது? ---------------

24) பாடசாலை ஒன்றில் 3 இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் அணி நடை, உடற்பயிற்சி, ஒழுக்கம், விளையாட்டுத்திறன், இல்ல ஒழுங்கமைப்பு போன்றவற்றில் இல்லங்கள் பெற்ற புள்ளிகள் தனித்தனியாக தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து வினாவப்பட்டுள்ள வினாக்களுக்கான சரியான விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக.




i) இல்லம் C விளையாட்டுத்திறனில் பெற்ற புள்ளியை விட 4 மடங்கு அதிகமாக பெற்ற இல்லம், புள்ளிகள் என்பவற்றைத் தருக.

---

ii) இத்தகவலின்படி வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்படும் இல்லத்தையும் புள்ளிகளையும் தருக.

---

iii) இல்லம் C யை விட இல்லம் A எவ்வளவு புள்ளிகளைக் கூடுதலாகப் பெற்றுள்ளது?

---

25) இந்தக் காட்சியை அவதானித்து ஐந்து சொற்களுக்கு குறையாத ஆறு வரிக் கவிதை எழுதுக.



i) ---------------
ii) ---------------
iii) ---------------
iv) ---------------
v) ---------------
vi) ---------------



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - I
1.30 மணி

# கல்வி முரசு



01) குழாய் ஒன்றின் மூலம் பாத்திரம் ஒன்றின் $\frac{3}{5}$ இற்கு நீர் நிரப்ப 2 மணித்தியாலம் எடுத்தது. பாத்திரத்தில் முற்றாக நீர் நிரப்பப்படுவதற்கு மேலும் எவ்வளவு நேரம் எடுக்கும்?

(i) 10 நிமிடம் (ii) 1 மணித்தியாலம் 20 நிமிடம் (iii) 1 மணித்தியாலம் 30 நிமிடம்

02) என்னிடம் 10 புத்தகங்கள் இருந்தன. அவற்றில் $\frac{2}{5}$ பங்கை தம்பிக்கும், $\frac{1}{5}$ பங்கைத் தங்கைக்கும் கொடுத்தேன். இப்போது என்னிடம் மீதியாகவுள்ள புத்தகங்கள் எத்தனை?


(i) 4 (ii) 6 (iii) 7

03) பின்வரும் ஒவ்வொரு புதிரிலும் மறைந்துள்ள சொல்லைக் கண்டு பிடித்து புள்ளிக் கோட்டில் எழுதுக. இது இரண்டு எழுத்துக்களைக் கொண்ட சொல்லாகும்

a) முதல் எழுத்து பணத்தில் உண்டு, குணத்தில் இல்லை

b) இரண்டாம் எழுத்து இசையில் உண்டு, இமையில் இல்லை (......................)


04) கீழே தரப்பட்டுள்ள வரிப்படத்தில் காணப்படும் A,B,C,D,E,F,G ஆகிய ஏழு பகுதிகளுக்கு இரு அடுத்துள்ள பகுதிகளில் ஒரே நிறம் பூசப்படாதவாறு சிவப்பு, மஞ்சள், வெள்ளை, இளஞ்சிவப்பு என்னும் நிறங்கள் பூசப்படுதல் வேண்டும். இதன் அடிப்படையில் கீழுள்ள வினாக்களுக்கான சரியான விடையைத் தெரிந்து கீறிடுக.




A,E,G ஆகிய பகுதிகளில் முறையே மஞ்சள் , வெள்ளை, இளஞ்சிவப்பு பூசப்பட்டிருக்கும் எனின் D,F ஆகிய பகுதிகளில் பூசக்கூடிய நிறங்களை முறையே காட்டும் விடை எது?

(i) இளஞ்சிவப்பு, மஞ்சள்
(ii) வெள்ளை , சிவப்பு
(iii) சிவப்பு, மஞ்சள்

05) ரவி, குமார், சுரேஷ் ஆகிய மூவரும் தமது மோட்டார் வாகனங்களில் முறையே A,B,C எனும் புள்ளிகளில் ஆரம்பித்து வெவ்வேறு பாதை வழியாக சென்று முறையே P,Q,R எனும் புள்ளிகளை அடைகின்றனர். அவர்கள் சென்ற வெவ்வேறு பாதைகள் கீழே உள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளன.




A- ரவி ஆரம்பித்த புள்ளி
B - குமார் ஆரம்பித்த புள்ளி
C- சுரேஸ் ஆரம்பித்த புள்ளி


06) இம் மூவரும் சென்ற மொத்தத் தூரம் யாது?

......................................

07) இம்மூவரில் யார் குறைந்த நேரத்தில் தனது பயணத்தை முடித்திருப்ப ர்


......................................

08) i படத்தில் காட்டப்பட்டுள்ள சென்ரிமீற்றர் அளவுத் திட்டத்திற்கு ஏற்ப இரண்டு நீளங்களுக்கிடையிலான வித்தியாசம் எத்தனை சென்ரி மீற்றர்.




(---------------------------------------)

09) ii ஒரே அளவு நீளமும் அகலமும் உடைய கடதாசிக் கீலங்கள் 10 உருவில் காட்டியவாறு அட்டைஒன்றில் ஒட்டப்பட்டுள்ளது. உருவில் குறுகிய பக்க நீளம் 6cm எனில் அதன் அடுத்தபக்க நீளத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.




(-----------------------)

10) சைக்கிளோட்டி ஒருவன் 20 நிமிடங்களில் 8km தூரம் பயணம் செய்வான். அவன் 1 மணித்தியாலம் 30 நிமிடங்களில் செல்லக் கூடிய தூரம் எவ்வளவு?

---------------------------------------------------------------

11) பத்மாவதி ஒரு நாளைக்கு 6 மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை இரண்டு மேசைக்கரண்டிகள் வீதம் மருந்து குடிப்பாள். 2 வாரத்தில் அவள் குடிக்கும் மருந்தின் அளவை m*l* .இல் தருக.

---------------------------------------------------------------

12) கழிக்க : $\frac{6}{10} - \frac{1}{2}$ ------------------------------

13) 5 ஜாம் போத்தல்களின் விலை ரூபா 500 ஆகும். ஜாம் போத்தல் ஒன்றை வாங்குவதற்கு வெற்றுப் போத்தல் ஒன்றையும் கொடுத்தால் அதன் விலை 6/= குறைக்கப்படும். வெற்றுப் போத்தல் ஒன்றைக் கொடுக்கும் போது ஜாம் போத்தல் ஒன்றின் விலை என்ன?

---------------------------------------------------------------


14) கம்பி வேலியொன்றின் இரு தூண்களுக்கிடையிலுள்ள தூரம் 4 மீற்றர் ஆகுமாறு 8 தூண்கள் நடப்பட்டுள்ளன முதலாம் தூணிலிருந்து கடைசித் தூண் வரையுள்ள தூரம் எவ்வளவு,?

---------------------------------------------------------------

15) நாளை மறுநாளைக்கு பின்னர் வரும் நாள் வியாழக்கிழமை எனின் இன்றைய தினம் யாது?



16)




(i) 14 (ii) 18 (iii) 10

17) **கீழுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்ட கூற்றுக்கள் பிழையானவை ஆகும். அவை ஏன் பிழையானவை என்பதற்கான காரணத்தை தெரிந்து கோடிடுக.**

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு பஸ்ஸில் செல்வதற்கு பணம் செலவாகும்?

(i) இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு பஸ்ஸில் செல்வதற்கு அதிக கட்டணம் அறவிடப்படுவதில்லை என்பதால்

(ii) பஸ் கட்டணத்தை விட கப்பல் கட்டணம் அதிகமானது என்பதால்

(iii) இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் தரைப் பாதை இல்லை என்பதால்

தமது முட்டைகளைக் காகங்கள் உண்டு விடக் கூடாது என்பதற்காக வெளவால்கள் மறைவான இடங்களில் முட்டைகளை இடுகின்றன.

(i) வெளவாலின் முட்டைகளைக் காகங்கள் உண்பதில்லை என்பதால்


(ii) வெளவால் முட்டை இடுவதில்லை என்பதால்

(iii) வெளவால்களுக்கு முட்டையிட மறைவான இடங்கள் கிடைப்பதில்லை என்பதால்

18) அவன் நாளை வருவான் என்ற வாக்கியத்தில் உள்ள ஒவ்வொரு சொல்லும் இரகசியக் குறியீட்டினால் எழுதப்பட்டுள்ளது. இவ்வாக்கியம் எழுதப்பட்டுள்ள சரியான முறை எது?

(i) 169 (ii) 422 (iii) 633

**25ஆம் 26ஆம் வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டது. உருவில் எண் இயந்திரம் ஒன்று காட்டப்பட்டுள்ளது. அவ்வியந்திரத்துக்குள் எண் ஒன்றை உட்செலுத்தினால் அது அவ்வெண்ணை 3 இனால் பிரித்து கிடைக்கப் பெறும் விடையில் இருந்து 1 ஐ கழித்து வரும் விடையைத் தரும்.**





19) இவ்வியந்திரத்தினுள் 3 ஐ செலுத்தினால் கிடைக்கும் விடை யாது?

(i) 0 (ii) 2 (iii) 3

20) இவ்வியந்திரத்தின் மூலம் இரண்டை விடையாகப் பெறவேண்டுமானால் உட்செலுத்த வேண்டிய எண் யாது?

(i) 6 (ii) 9 (iii) 12

21) முதலில் தரப்பட்ட உருவை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது அதில் தோன்றும் உருவத்தை தெரிந்து கோடிடுக.






யாழ். பழையபூங்கா வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள யாழ். மாவட்ட நில அளவை அலுவலகத்தின் பெயர்ப்பலகையை காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் திரைநீக்கம் செய்துவைத்து திறந்து வைப்பதனையும் அதிதிகள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒருபகுதியினரையும் காணலாம். (படங்கள்:- பார்த்தீபன்)

# இலங்கை மீனவர்கள் 25 பேர் கைது

இந்தியாவின் தமிழக கடல் எல்லைக்குள் மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 25 இலங்கை மீனவர்களை இந்திய கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

நாகப்பட்டினம் மாவட்டத்தின் வேளாங்கன்னி கடல் பகுதியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் 5 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் தமிழக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட உள்ளனர்.

இதனிடையே இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறிய குற்றச்சாட்டில் இலங்கை மீன்பிடிப் படகொன்றை இந்திய கடலோர காவற்படையினர் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளனர்.

இந்தப் படகில் 5 இலங்கை மீனவர்கள் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. திருகோணமலையில் இருந்து கடலுக்குச் சென்ற மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இந்திய - இலங்கை மீனவர்களின் பிரச்சினை தீர்க்கப்பட்ட பின்னர் இலங்கை மீனவர்கள் இந்தியாவினால் கைது செய்யப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.

# தொழில்நுட்ப பயிற்சி பெறுவதில் விவசாயிகளுக்கு ஆர்வமில்லை

## கிளி. மாவட்ட பிரதி விவசாயப்பணிப்பாளர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விவசாயிகளில் பெரும்பாலானோர் விவசாய தொழில்நுட்பங்கள் தொடர்பான பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுவதில்லை என கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்க) எஸ்.செல்வராஜா நேற்று தெரிவித்துள்ளார்.

அதிகளவு விளைச்சல்களைப பெறுவதற்குரிய விவசாய முறைகள் தற்போது கண்டறியப்பட்டுள்ளன. விவசாய தொழில்நுட்பங்களைப் பயிற்றுவிக்கும் பயிற்சிகள் பல்வேறு திட்டங்களினூடாக தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இருந்தும் மேற்படி தொழில்நுட்ப பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதில் விவசாயிகள் அக்கறை காட்டுவதில்லை. இவ்வாறான பயிற்சிகளில் கலந்து கொண்டு நவீன முறையிலான பயிற்சிகளை மேற்கொண்டு அதன்மூலம் விவசாயிகள் கூடுதலான நன்மையடையும் சந்தர்ப்பம் ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பல்கலை மாணவர் ஒன்றியத்திற்கு புதிய ஏற்பாட்டாளர் நியமனம்

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் புதிய ஏற்பாட்டாளராக கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பீட மாணவரான நஜீத் இந்திக நியமிக்கப்பட்டுள்ளார்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் இனி வரும் காலங்களில் இவரது தலைமையில் இயங்கும் என அதன் முன்னாள் ஏற்பாட்டாளர் சஞ்ஜீவ பண்டார வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர்களாக இருந்தவர்கள் பிற்காலத்தில் இலங்கை அரசியலில் முக்கியமான பாத்திரங்களாக திகழ்ந்துள்ளதுடன் சிலர் தமது உயிர்களைத் தியாகம் செய்துள்ளனர். மருத்துவ மாணவர் ஒருவர் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாள்ராக நியமிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும். ஜே.வி.பி.யின் மாணவர் அமைப்பாக இயங்கிய அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், அந்தக்கட்சியில் இருந்து பிரிந்த முன்னிலை சோசலிசக் கட்சியின் மாணவர் அமைப்பாக தற்போது செயற்பட்டு வருகிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேலைத்திட்ட முன்மொழிவுகளை அடையாளப்படுத்தும் கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

மக்கள் பங்களிப்புடனான பயிற்சிப்பட்டறையும் வேலைத் திட்டங்களை அடையாளப்படுத்துவதற்கான திட்ட முன்மொழிவுகள் தொடர்பான கலந்துரையாடல் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இதன்படி இன்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மருதநகர் பன்னங்கண்டி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள கிளை வாய்க்கால்கள், கழிவு வாய்க்கால் மற்றும் வீதிகளை திருத்துவது தொடர்பான கலந்துரையாடல் காலை 9 மணிக்கு மருதநகர் பிறவுண் வீதி சின்னக்காடு என்னும் இடத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை பன்னங்கண்டி கிராமத்தில் மேற்படி கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு பன்னங்கண்டி கிராம அலுவர் பிரிவில் நடைபெறவுள்ளது.

எனவே இப்பிரதேசத்திலுள்ள கமக்கார அமைப்புக்களை கலந்து கொள்ளுமாறு இரணைமடு நீர்ப்பான அபிவிருத்தி திட்டப்பொறியியலாளர் ந. சுதாகரன் அறிவித்துள்ளார். (69)

# விக்கிரமபாகு கருணாரத்ன பொலிஸ் நிலையத்திற்கு அழைப்பு

நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்னவிற்கு கம்பஹா பொலிஸ் நிலையம் அழைப்பு விடுத்துள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் போலி தகவல்களை உள்ளடக்கி வேட்பு மனு தாக்கல் செய்த சம்பவத்தை அடுத்து அது குறித்து விசாரணை நடத்தவென இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நவ சமசமாஜக் கட்சி மேல் மாகாண தேர்தலில் போட்டியிட கம்பஹா மாவட்டத்தில் தாக்கல் செய்த வேட்பு மனுவில் உள்ள 43 பெயர்களில் பல போலியானவை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு 15 பெயரின் பெயர் விபரங்கள் போலி என பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உதவிக்கொடுப்பனவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் சமுர்த்தி பயனாளிகளுக்கான உதவிக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதன்படி கே.என்/41 இராமநாதபுரம் பிரதேசத்தில் இன்று செவ்வாய்க்கிழமையும் கே.என்/18 அம்பாள்நகர் தெற்கு பிரதேசத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை உதவிக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. (69)

# கும்பாபிஷேகம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அருள்மிகு ஸ்ரீசண்டிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 6.34 மணிமுதல் 7.30 மணிவரையிலான சுபவேளையில் நடைபெறவுள்ளது.

அடியார்களின் எண்ணெய் காப்பு சாத்தும் வைபவம் இன்று காலை 8.30 மணிமுதல் மாலை 5 மணிவரை இடம்பெறும்.

உரும்பிராய் சிவசர்ம ஸாஸ்தா ஆதீனத்தைக் சேர்ந்த சபரிமலை குருசுவாமி பிரம்மஸ்ரீ தானு வாசுதேவக் சிவாசாரியார் பிரதிஷ்ட பிரதம குருவாக இருந்து கிரியைகளை ஆற்றுவார். தொடர்ந்து 48 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். (109)

# வீதிப்பெயர் மாற்றத்தை கண்டித்து கல்முனையில் அமைதிப் பேரணி



கல்முனையில் கடந்த 300 வருடம் பழமைவாய்ந்த தமிழர்களின் பூர்வீக கிராமாக அமைந்துள்ள கல்முனை தரவைப் பிள்ளையார் கோவில் வீதியை கடற்கரைப் பள்ளிவாசல் வீதி என பெயர் மாற்றத்தை கண்டித்து அமைதிப் பேரணி நேற்று காலையில் இடம்பெற்றது.


தரவைப் பிள்ளையார் கோவில் வீதி என கோவிலின் முன்னாள் செல்லும் வீதியை கடற்கரைப் பள்ளிவாசல் வீதி என பெயர் மாற்றம் செய்ய மாநகரசபையினால் எடுக்கப்படும் முயற்சியை கண்டித்து கல்முனை வாழ் தமிழ் பொது மக்கள், பொது அமைப்புக்களும் விடுத்த அழைப்பையடுத்து நேற்றுக் காலை 9.00 மணிக்கு தரவைப் பிள்ளையார் ஆலயத்தின் இருந்து அமைதிப் பேரணி ஆரம்பித்தது.

சுலோகங்கள் ஏந்தியவாறு அமைதி பேரணியாக கல்முனை மாநகரசபை மற்றும் கல்முனை தமிழ் பிரதேச செயலகம், முஸ்லிம் பிரதேச செயலகம் வரை சென்று பகல் 11 மணிக்கு மகஜர்களை மாநகர ஆணையாளர். பிரதேச செயலாளர்களிடம கையளித்துள்ளனர். அந்த மகஜரில்:

இந்த ஆலயத்தின் பெயரில் உள்ள வீதியின் பெயரை கல்முனை மாநகரசபையின் முஸ்லிம் அங்கத்தவர்களின் பெரும்பான்மையை பயன்படுத்தி நீங்கள் மாற்ற முயற்சியெடுப் பது ஒரு நடுநிலையான மாநகர முதல்வரின் செயல் அல்ல என்பதுடன் இச் செயல் தமிழ் இனத்திற்கும் குறிப்பாக இந்து மக்களுக்கும் செய்யும் பெரும் அநீதியாகும். இவற்றுக்கு மேலாக இச்செயல் பிற்காலத்தில் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையில் நிரந்தரமான பகைமையை ஏற்படுத்தும் என்பதை கௌரவ முதல்வராகிய உங்களுக்கும் சபை உறுப்பினர்களுக்கும் ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

ஆகவே கல்முனை மக்கள் மத்தியிலுள்ள பொது அமைப்புக்களும் இந்து ஆலயங்களின் நிருவாகத்தினரும் பொது மக்களாகிய நாங்களும் எல்லோருமாக இந்த வீதியின் பெயரை மாற்றம் செய்வதற்கு எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவிக்கின்றோம். என அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க கடல் எல்லை நோக்கி ஈரான் யுத்தக் கப்பல்கள் நகர்வு



ஈரானின் பல யுத்தக்கப்பல்கள் அமெரிக்க கடற்பரப்பு எல்லையை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக ஈரானிய கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பாரசீக வளைகுடாவில் அமெரிக்க கடற்படை கலங்கள் தரித்து நிற்பதற்கு பதிலடியாக ஈரானிய யுத்தக் கப்பல்களை அமெரிக்க கடற்படை எல்லையை நோக்கி நகருமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை ஈரானிய கடற்படை அதிகாரியான அட்மிரல் அபஷின் ரெஸாய் ஹதாத்தை மேற்கோள் காட்டி ஈரானின் பார்ஸ் செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது.


தென்னாப்ரிக்காவுக்கு அருகிலிருந்து அத்திலாந்திக் சமுத்திரத்தை நோக்கிய ஈரானிய யுத்தக் கப்பல்கள் பயணத்தை ஆரம்பித்துள்ளதாக அட்மிரல் ஹதாத் தெரிவித்துள்ளார். இந் நகர்வானது ஒரு சமிக்ஞையாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை வொஷிங்டனிலுள்ள தம்மை இனங்காட்ட விரும்பாத அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஈரானிய கப்பல்கள் அமெரிக்க கடல் எல்லையை நெருங்குவதாக கூறப்படுவது குறித்து சந்தேகம் தெரிவித்தார். ஆனால், சர்வதேச கடற்பரப்பில் இயங்குவதற்கு கப்பல்களுக்கு சுதந்திரம் உள்ளதாக அவர் தெரிவித்தாக ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

## இடையூறுகள் செய்வதற்காக நாடாளுமன்றம் கூட்டப்படுவதில்லை இந்திய குடியரசுத் தலைவர்



விவாதம் நடத்தவும், முடிவுகள் எடுக்கவும் தான் நாடாளுமன்றம் கூட்டப்படுகிறது, இடையூறு செய்ய அல்ல என உறுப்பினர்களுக்கு இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி அறிவுறுத்தியுள்ளார். 15-வது நாடாளுமன்றத்தின் கடைசி கூட்டத்தொடர் தொடங்கிய நாள் முதல், தெலுங்கானா பிரச்சினை, தமிழக மீனவர்கள் பிரச்சினை, டில்லியில் அருணாச்சல் மாணவர் பலியான சம்பவம் போன்ற பல்வேறு விவகாரங்களை முன் வைத்து உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால் ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், நாடாளுமன்றம் தொடர் அமளி குறித்து குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி கூறுகையில்: ”நாடாளுமன்றம் விவாதம் நடத்தவும், முடிவுகள் எடுக்கவும் தான் கூட்டப்படுகிறது இடையூறு செய்ய அல்ல. உறுப்பினர்கள் தங்கள் பொறுப்பு என்ன என்பதை உணர வேண்டும். இதற்காக அவர்கள் சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்”.என்றார்.

## மதினாவில் தீ விபத்து; யாத்திரிகர்கள் 15பேர் பலி

சவுதி அரேபியாவின் புனித நகரமான, மதினாவில், நேற்று, முன்தினம் விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில், 15 பேர் உயிரிழந்தனர் 130 பேர் காயமடைந்தனர். சவுதி அரேபியாவில், மக்காவுக்கு அடுத்தபடியாக, புனித நகரமாக கருதப்படும் மதினா நகரத்திற்கு யாத்திரைக்குச் சென்ற பயணிகள் பலர், இங்குள்ள விடுதியில தங்கியுள்ளனர். நேற்று முன்தினம் காலை, இங்குள்ள ஒரு விடுதியில் தீ விபத்து ஏற்பட்டது. இந்த விடுதியில் தங்கியிருந்த, 700 பேரில், 15பேர், மூச்சுத்திணறி இறந்துள்ளனர் 130 பேர் காயமடைந்துள்ளனர். இறந்தவர்களில், பலர் எகிப்து நாட்டைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பூனை கடித்தவர் உயிருக்கு போராட்டம்

அமெரிக்காவில், பூனைக் கடியால் பாதிக்கப்பட்டவரின் கை, கால் விரல்கள், கல் போன்று உருமாறியுள்ளன.அமெரிக்காவின், ஓரேகான் மாகாணத்தைச் சேர்ந்த பால் ஸ்டீவ் கேலார்ட், (வயது-61) என்பவருக்கு கடந்த மாதம், பூனை கடித்துள்ளது இதனால், உடல்நலம் பாதிக்கப்பட்ட, இவர் ஸ்டீவ்வின் கை, கால் விரல்களில், முடிச் சுக்கள் ஏற்பட்டு வீக்கம் உண்டானது. கை, கால் விரல்களின் நிறம், கறுப்பாக மாறத் தொடங்கியது கடந்த, 27 நாட்களாக, கோமா நிலையில் இருந்த, இவருக்கு உயிர்காக்கும் கருவிகள் பொருத்தப்பட்டன.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, ஒரு மாதமான நிலையில், அவரது இதயம், செயலிழந்துவிட்டது. ”நிமோனியா, நெரிகட்டுதல் உள்ளிட்ட, மூன்று நோய்கள் ஒரே நேரத்தில் தாக்கியிருப்பதால், . அவர், உயிர் பிழைப்பது கடினம்“ என, டாக்டர்கள் கூறியுள்ளனர்.

## மத்திய அரசு ஒதுக்கிய நிதி மக்களை சென்றடையவில்லை

### ராகுல் காந்தி குற்றச்சாட்டு



மத்திய அரசு ஒதுக்கிய நிதி மக்களைச் சென்றடையவில்லை என்று காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஒரிசாவின் கட்டாக் மாவட்டம், சாலிபூர் நகரம், பாதபடா கிராமத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்

ஒரிசாவில் செயற்படுத்தப்படும் மத்திய அரசின் திட்டங்களுக்காக பெரும் தொகை ஒதுக கப்பட்டுள்ளது. அந்தத் தொகை மக்களுக்கு சென்றடையவில்லை. நடுவழியில் திடீரென மாயமாகி விடுகிறது. மதிய உணவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட மத்திய அரசு நிதி வேறு சிலரின் வயிற்றை நிரப்ப அனுப்பப்பட்டுள்ளது. இதேபோல் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட அரிசி வேறு திசைக்கு திருப்பி விடப்பட்டுள்ளது. பிஜு ஜனதா தள ஆட்சியில் ஊழல் அதிகரித்து வருகிறது. இவை தவிர மத்திய அரசு ஒதுக்கிய ரூ.5,000 கோடி ரூபா நிதி மக்கள் பணிகளுக்கு பயன் படுத்தப்படாமல் கிடப்பில் போடப பட்டுள்ளது.

மாநிலத்தில் இரும்புத் தாதுக்கள், மக்னீசியம் ஆகியவை பெருமளவில் கொள்ளை அடிக்கப் படுகின்றன. இந்தச் சுரங்க கொள்ளை மூலம் சிலர் செல்வச் செழிப் புடன் கொழிக்கின்றனர். ஆனால் தொழிலாளர்கள் வறுமையில் வாடுகின்றனர். வறுமைகாரணமாக சுமார் 3500 விவசாயிகள் தற்கொலை செய்துள்ளனர். 10 இலட்சம் இளைஞர்கள் வேலை வாய்ப்பின்றி தவித்து வருகின்றனர் என்றார்.

## குளிர்காய்வதற்காக காரை கொழுத்திய இளைஞன்

சீனாவில் வேறு ஒருவரின் காரை கொளுத்தி ஆனந்தமாக குளிர் காய்ந்த நபரால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இத்தகவல் அறிந்த தீயணைப்பு படையினரும், பொலிசாரும் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர்.


இது எப்படி நடந்தது என்பதை அறிய முடியாத பொலிசார், அப்பகுதியில் இருந்த கண்காணிப்பு கமராவை ஆராய்ந்ததில், இளைஞரைக் கண்டறிந்தனர்.

அப்பகுதி மக்கள் அளித்த புகாரின் அடிப்படையில், வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த 20 வயது இளைஞனான குற்றவாளியை பொலிசார் கைது செய்துள்ளனர்.

## அதிகம் சாப்பிட்டதால் வெடித்தது வயிறு

சீனத் தலைநகரான பீஜிங்கில் நடந்த விநோதமான சம்பவம் ஒன்றில் மது அருந்தியபின், அளவுக்கு அதிகமாக சாப்பிட்ட பெண்ணிற்கு அறுவைச் சிகிச்சை செய்த போது அவரது வயிறு வெடித்துள்ளது.

58 வயதான அப்பெண் அளவுக்கு அதிகமாக சாப்பிட்டதில் அவரின் கீழ்வயிற்றில் கடும் வயிற்று வலி காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்த போது வயிறு வெடித்து வாயு வெளியாகி தீப் பிழம்பு தோன்றியதாகக் கூறப்படுகிறது. அவரது வயிற்றில் உள்ள குடல் முழுவதையும் அகற்ற முடிவு செய்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அவரது வயிற்றில் இருந்த இரசாயனங்களுடன் அறுவைச் சிகிச்சையின் போது பயன்படுத்தப்பட்ட மின் அறுவை கத்திக்கும் ஏற்பட்ட தொடர்பினால் இச்சம்பவம் நடந்ததாக ஹாவ் மேலும் கூறினார்



## மக்களிடம் பிரிவினையை ஏற்படுத்தி குளிர்காய்கிறது மத்திய அரசு


### நரேந்திரமோடி குற்றச்சாட்டு



இந்தியாவின் மத்தியில் ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ் கட்சி, தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகளை அபகரித்து, அவர்களை வஞ்சிக்கிறது, என, பா.ஜ., பிரதமர் வேட்பாளர், நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம், கொச்சியில், நேற்று முன்தினம் நடந்த பொதுக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில் காங்கிரஸ் கட்சி, 60 ஆண்டுகளாக, மத்தியில் ஆட்சியில் உள்ளது. மக்கள் இடையே, பிரிவினையை ஏற்படுத்தி, அதில் குளிர் காய்கிறது. தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான உரிமைகளை பறிக்கும் சதிச் செயலை, காங்கிரஸ் கட்சி மேற்கொண்டு உள்ளது. தலித் மக்களுக்காக, டாக்டர் அம்பேத்கர் அளித்துள்ள சில உரிமைகளை பறிக்கும் சதிச் செயல்களை, காங்கிரஸ் கட்சி அரங்கேற்றுகிறது. நாட்டு மக்களிடையே விஷ விதையை தூவுவதற்கு, நீதிபதி ரங்கநாத் குழு அறிக்கையை, காங்கிரஸ் கட்சி பயன்படுத்துகிறது என்றார்

# துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்களுக்கு நீதிவேண்டி ஊர்வலம்



(வவுனியா)

வவுனியா அட்டம்பஸ்கட சிறுவர் இல்லத்தில் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் எனக் கோரி ஊர்வலமொன்று நேற்று நடைபெற்றது. வவுனியா பிரதான தபால் நிலையத்திற்கு முன் ஆரம்பமான குறித்த ஊர்வலம் மணிக்கூட்டு கோபுரம் வழியே பஸார் வீதியைச் சுற்றி வவுனியா மாவட்ட செயலகத்தை வந்தடைந்தது.

இந்த ஊர்வலத்தில் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எனது ஆட்சியில் மன்னிப்பே கிடையாது என்ற ஜனாதிபதியின் வாக்குறுதியை மையப்படுத்தி அட்டம்பஸ்கட சிறுவர் இல்லத்தில் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும், பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்கும் செயற்பாடுகள் எதுவிதமான தலையீடுகளுமின்றி நீதித்துறை சுதந்திரமாக செயற்படுத்தலை உறுதிப்படுத்த வேண்டும், பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்திற்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும், இதுவரை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இடையூறு விளைவித்து அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியவர்கள் இனி அவ்வாறு செயற்படுத்தாமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் துஸ்பிரயோகத்திற்கு உள்ளான குடும்பங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் உள்ளிட்ட பல வாசகங்களை ஏந்தியவாறு ஊர்வலத்தில் பங்கேற்றோர் சென்றிருந்தனர்.

வட மாகாண பெண்கள் மாற்றத்திற்கான பரிந்துரை வலையமைப்பு மற்றும் சமூக மட்ட அமைப்புக்கள் சமூக ஆர்வலர்களும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந் ஊர்வலத்தின் இறுதியில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்கான மகஜரொன்று வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சரஸ்வதி மோகநாதனிடம் கையளிக்கப்பட்டது.

# வடக்கில் பெண்கள் மீதான வன்முறை தடுத்து நிறுத்த விசேட திட்டம்

(கொழும்பு)

வடபகுதியில் பெண்கள், சிறுவர்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகக் கண்டறியவும், அவற்றைத் தடுக்கவும் ஒரு விசேட வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இவ்விடயமாக மேற்கொண்ட ஆய்வுகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும். யாழ்ப்பாணம், ஸ்ரீஜயவர்தனபுரம், களனி, திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் உதவியுடன் இந்த ஆய்வு முதன் முறையாக மேற்கொள்ளப்பட்டது.

கெயார் சர்வதேச நிதி உதவியுடன் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் இந்த ஆய்வின் முதற் கட்டம் மேற்கொள்ளப்பட்டது.

வடமாகாண மாவட்ட, மற்றும் பிரதேச செயலகங்களில் சிறுவர், மகளிர் அபிவிருத்தி பிரிவுகள் மூலமாக இத்திட்டத்தை மேற்கொள்ளவும் அமைச்சு கருதியுள்ளது.

# தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய புதிய நிர்வாகிகள் தெரிவு

இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் வருடாந்த மாநாடும் புதிய நிர்வாகிகள் தெரிவும் நேற்று முன்தினம் காலை கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவராக ஏ.என்.எஸ். திருச்செல்வம், செயலாளராக குழந்தைவேல் ஜெயந்திரன், பொருளாளராக பஸ்தியாம்பிள்ளை ஜோன்சன், உப தலைவர்களாக செ.பேரின்பராஜா, எஸ்.தில்லைநாதன், உப செயலாளர்களாக கேஷாயினி எட்மண்ட், மு. செல்வராஜா, உப பொருளாளராக அருளானந்தம் சஞ்ஜீத் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக ஆர். பாரதி, அனந்தபாலகிட்ணர், எஸ்.ஸ்ரீகஜன், அ.நிக்ஷன், அ.பொன்னம்பலம், கே. எஸ்.சிவகுமாரன், தெ. மதுசூதனன், ஏ.லிலியன் சிவசண்முகநாதன், ரி.பிரதீபன், எஸ். சண்முகராஜா, ஆர்.சேதுராமன், எஸ்.மோசஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வின் சிறப்புவிருந்தினராக சட்டத்தரணி க.மு.தர்மராஜா கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்.

## விவசாயிகளுக்கு...

திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றது எனக் குறிப்பிட்ட அமைச்சர், கடந்த 2011 ஆம் ஆண்டுடன் இவ் ஓய்வூதியத் திட்டம் முடிவுற்றிருந்த நிலையில், ஜனாதிபதியால் இத்திட்டம் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ள அதேவேளை இத்திட்டம் அடுத்து வரும் காலங்களில் இடைநிறுத்தப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் எவையும் ஏற்படாத வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு மீளவும் நடை முறைப்படுத்தப்படுகின்றது எனவும் தெரிவித்தார்.

மேலும் 1987ஆம் ஆண்டு அமைச்சர் காமினி விஜயசூரியவினால் 750 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டபோதும், 75 மில்லியன் ரூபாய்கள் மட்டுமே கிடைக்கப்பெற்றது. இந்நிலையில், 2011 ஆம் ஆண்டுடன் கிடைக்கப் பெற்ற நிதி முழுவதும் முடிவடைந்த நிலையில் ஓய்வூதியமும் இடைநிறுத்தப்பட்டது. 1987 ஆம் ஆண்டு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் விவசாயிகளிடமிருந்து சிறு தொகை பணம் அறவிடப்பட்டு இருநூறு ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டது. பின் அத்தொகையை ஐந்நூறாக உயர்த்தியதோடு பின் ஆயிரமாகவும் உயர்த்தப்பட்டது. ஆனால் வழங்கும் தொகை அதிகரித்த போதும் விவசாயிகளிடமிருந்து பெறப்படும் தொகை அதிகரிக்கப்படவில்லை. இதனால் குறித்த செயற்பாட்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதி திறைசேரியில் முடிவடைந்து போனது இந்நிலையில் தான் இத்திட்டத்தை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திறைசேரியில் இருந்து ஆயிரம் மில்லியன் ரூபாவையும் பொபிசெத லொத்தர் நிதியிலிருந்து 350 மில்லியன் ரூபாயும் காப்புறுதி நிதியிலிருந்து ஒரு தொகைப் பணத்தையும் பெற்றே இத்திட்டத்தை மீளவும் அறிமுகப்படுத்தியுள்ளார். இத்திட்டம் தொடர்ந்தும் நிலை பெறுவதற்காகவே அவர் விசேட திட்டங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளார் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் நூபவதி கேதீஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகன், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் விவசாயக் காப்புறுதி பணிப்பாளர் நாயகம் சம்பிக்க வீரசிங்க, கமத்தொழில் காப்புறுதிச் சபையின் உதவிப் பணிப்பாளர் விநாயகமூர்த்தி ஆகியோரும் மற்றும் பிரதேச செயலர்கள் அரச கமநலசேவை உதவி ஆணையாளர்கள் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர். (29)

## நெடியவனின்...

னவராக நெடியவன் குழுவில் கணிக்கப்பட்டவர்.

முன்னாள் விடுதலைப் புலிகளான ரூபன் மற்றும் மதி ஆகியோருடன் முனீஸ்வரமூர்த்தி நெருக்கமான தொடர்பினை கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் இருவரும் கலிபோர்னியாவில் தற்போது கட்டடப் பொருட்கள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இறுதிக் கட்ட யுத்தத்திற்கு பின்னர் முனீஸ்வரமூர்த்தி கப்பல் மூலமாக வடஅமரிக்காவை வந்தடைந்ததாக ரூபன் மற்றும் மதி இருவரும் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2007 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 22 ஆம் திகதி அநுராதபுர விமானப் படைத்த ளம் மீதான தாக்குதலில் முனீஸ்வர மூர்த்தியும் பங்கெடுத்திருந்தாகவும் நேசன் மேலும் தெரிவித்துள்ளது.

## இந்திய...

நிராகரிப்பது மட்டுமல்ல அந்த வகையான தீர்வைத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கருத்தில் எடுத்திருக்கின்றது என்றால் அத்தகைய தீர்வு எமது இனத்திற்கான சாவு மணியாக அமையும். இதில் மிகவும் தெளிவாக இருக்கின்றோம்.

இந்தியாவில் பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகள் மாநிலங்களாக இருந்தபோது இந்தியாவில் இருந்த அரசியல் அமைப்பின் பிரகாரமான தீர்வே தமிழர்களுக்கு தேவையாக இருக்கின்றது. இந்தியாவில் இருந்து பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகள் உருவாகியதன் பின்னர் உள்ள இந்திய அரசியல் அமைப்பின் கீழ் ஈழத்தமிழர்களுக்கு தீர்வு சாத்தியப்படாத ஒன்று என்றும் தெரிவித்த அவர், தமிழ் மக்களுக்கு எதைக் கூறி வெற்றி பெற்றார்களோ அவற்றில் ஒன்றைக் கூட நிறைவேற்ற முடியாது தேர்தலில் ஒன்றைச் செய்வதும் அதன் பின்னர் வேறு வழிகளை நாடுவதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலையாகவுள் ளது. எனவே இதனைத் தமிழ் மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். எனவே தமிழ்மக்கள் அரசியல் உரிமையைப் பெறுவதற்கு ஒன்றுபடவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (பா)

## முல்லையில்....

களை அழித்து அந்தக் காணியில் முஸ்லிம்களை குடியமர்த்த ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மீள்குடியேற்ற ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக இந்த மனுவில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இலங்கை காணி சட்ட விதிகளின் பிரகாரம் அரச காணிகளை மக்களுக்கு வழங்கும் உரிமை மாவட்ட செயலாளருக்கு மட்டுமே உள்ளது என்றும் மீள்குடியேற்றம் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு காணியை பகிர்ந்தளிக்கும் அதிகாரம் இல்லை என்றும் இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே முல்லைத்தீவில் அரச காணிகளை பகிர்ந்தளிக்க ஜனாதிபதி ஆணைக்குழு எடுத்துள்ள முடிவை இரத்து செய்ய வேண்டும் என்று மேல்முறையீட்டு நீதிமன்றத்திடம் இந்த மனு கோருகிறது.

இந்த மனுவின் விசாரணையை ஏப்ரல் 29ஆம் தேதியன்று நடத்த தீர்மானித்துள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம், அன்றைய தினம் அரசாங்கம் தனது விளக்கத்தை அளிக்க வேண்டும் என மனுவில் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ள பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

## ஜெனிவாத்...

னத்திற்கு ஆதரவாக காணப்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தியா, சீனா, ரஷ்யா, தென் ஆபிரிக்கா போன்ற நாடுகள் இலங்கைக்கு ஆதரவளித்தால் தீர்மானத்தினை தோற்கடிக்கக் கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன என அவர் தெரிவித்துள்ளார். குறிப்பாக இந்தியாவின் தீர்மானம் மிகவும் முக்கியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சுவீகரிக்கப்பட்ட...

கொள்வதற்காக சுமார் 7.8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் உள்ள உரிமை கோரப்படாத காணிகளின் விபரங்களை பாதுகாப்புத் தரப்பினர் தமக்கு வழங்குமாறு அமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்ததாகவும், தனியார் காணிகளை பாதுகாப்புத் தரப்புக்கு சுவீகரிப்பதனால் அது காணி, காணி அபிவிருத்தி அமைச்சினாலேயே மேற்கொள்ளப்பட முடியுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (பா)

## ஞாபகார்த்த தினம்

நவாலி ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த நிதியத்தின் ஸ்தாபகத் தலைவர் அமரர் செ.செல்வராணியின் ஞாபகார்த்த தினம் இன்றாகும்.

ஸ்தாபக தலைவர் செ.செல்வராணி ஞாபகார்த்தமாக விசேட பூசை வழிபாடுகள் இன்று நவாலியில் இடம்பெறவுள்ளது.

## அமெரிக்க...

தாம் ஆதரவு வழங்க விருப்பம் வெளியிட்டார்.

அதுகுறித்த கலந்துரையாடலுக்கான அழைப்பும் எனக்கு கிடைத்திருந்தது.

யுத்தம் நிறைவடைய நான்கு தினங்கள் இருந்தபோதே இந்த விருப்பம் வெளியிடப்பட்டது. அமெரிக்க கப்பல் ஒன்றை அனுப்பி பொதுமக்களை மீட்டு திருகோணமலை கடற்கரையில் விடுவதாக அந்த தூதுவர் தெரிவித்தார்.

ஆனால், ஜனாதிபதி அதற்கு மாற்று கருத்தை வெளியிட்டதுடன், இந்தியா மற்றும் சில நாடுகளிடம் இருந்து இவ்வாறான யோசனை முன்வைக்கப்பட்டதாகவும், அமெரிக்காவின் உதவி பற்றி பின்னர் அறிவிப்பதாகவும் தெரிவித்தார்.

பின்னர் ஜனாதிபதி தம்மிடம் தனியாக கலந்துரையாடியதாகவும், அமெரிக்காவுக்கு இவ்வாறான வாய்ப்பை வழங்கியிருந்தால் விடுதலைப் புலிகளின் தலைமை உறுப்பினர்கள் காப்பாற்றப்பட்டிருப்பார்கள். யுத்தத்தை விரைவில் நிறைவு செய்திருக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

## மன்னார்...

ஒன்பது நாட்களுக்குப் பின்னர் நேற்று மீண்டும் 20ஆவது தடவையாக மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழியில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஜெனிவாத் தீர்மானத்தை எதிர்கொள்ள ஆபிரிக்க வலய நாடுகளுடன் பேச்சு

## அரசின் பிந்திய வியூகம்

(கொழும்பு)

ஜெனிவாவில் இலங்கை தொடர்பாக கொண்டு வரப்படவிருக்கும் தீர்மானம் தொடர்பில் ஆபிரிக்க வலய நாடுகளின் ஆதரவைப் பெறுவ தற்கு அரசு முயற்சி செய்து வருகிறது. இதற்காக இந்த நாடுகளின் அமைச்சர்களுடன் அரசு சார்பில் ஏற்கனவே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், ஆபிரிக்க நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கு, தென்னாபிரிக்காவின் உதவியை நாடுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அடுத்தமாதம் இலங்கை தொடர்பான தீர்மானத்தைக் கொண்டு வரும் முயற்சியில் அமெரிக்கா இறங்கியுள்ள நிலையில், இந்தத் தீர்மானத்தை தோற்கடிப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒருகட்டமாக, ஆபிரிக்க பிராந்தியக் குழுவில் இடம்பெற்றுள்ள நாடுகளை மடக்குவதற்கு, தென்னா பிரிக்காவைப் பயன்படுத்திக் கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஆபிரிக்க வலயத்தில், அல்ஜீரியா, பெனின், பொட்ஸ்வானா, புர்கினா பாசோ, கொங்கோ, ஐவரிகோஸ்ட், எதியோப்பியா, காபோன், கென்யா, மொரோக்கோ, நமீபியா, சியரலியோன், தென்னாபிரிக்கா ஆகிய 13 நாடுகள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கின்றன.

இந்த நாடுகள் மத்தியில், தென்னாபிரிக்காவுக்கு செல்வாக்கு உள்ளதால், அதனைப் பயன்படுத்தி, ஆபிரிக்க வலய நாடுகளை மடக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதற்கென தென்னாபிரிக்காவுக்கு அமைச்சர்கள் குழுவொன்றை அனுப்பத் திட்டமிட்டுள்ளதாக, கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும், இந்தக் குழு எப்போது பயணத்தை மேற்கொள்ளும் என்பது குறித்தோ, குழுவில் இடம்பெறும் அமைச்சர்கள் குறித்தோ இன்னமும் முடிவு செய்யப்படவில்லை.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் தென்னாபிரிக்கா அக்கறை காட்டுவதை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, ஐ.நா. மனித உரிமை பேரவையில் தனக்குள்ள சவால்களை சமாளிக்க தென்னாபிரிக்காவைப் பயனபடுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

# கிணற்றில் வீழ்ந்த குடும்பப் பெண் உயிரிழப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி, பாரதி வீதி பத்தமேனிப் பகுதியில் குடும்பப் பெண்ணொருவர் தோட்டக் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதில் அதே பகுதியைச் சேர்ந்த தேவகுமார் ஸ்ரீகலா (வயது - 47) என்பவரே இவவாறு மரணமடைநதவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

வன்னியிலிருந்து வந்து மேற்படி பிரதேசத்தில் வசித்துவரும் குறித்த பெண்ணுக்கு பிள்ளைகள் உள்ளனர். இந்நிலையில் இப்பெண் சித்தசுவாதீனம் உடையராக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண்ணை காணாது அவரது கணவர் மற்றும் பிள்ளைகள், அயலவர்கள் தேடியபோதே இப்பெண் தோட்டக் கிணற்றில் சடலமாக கண்டுபிடிக்கப்பட்டார்.

இப்பெண்ணின் மரணம் தொடரபில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன், பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (85)

# அக்கராயனில் கமநலசேவை நிலையம் புதிய கட்டடத்துக்கு நிதி ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

அக்கராயன் பகுதியில் கமநலசேவை நிலையம் அமைப்பதற்காக 9 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பிரதியமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக கமநல அபிவிருத்தி அமைச்சினூடாக இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயக் கேந்திர பிரதேசங்களில் கமநலசேவை நிலையங்கள் அமையப் பெறவேண்டும் என்பதனை சுட்டிக்காட்டி வரும் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் அக்கராயன் மற்றும் பளை ஆகிய பிரதேசங்களில் அந் நிலையங்கள் இதுவரை அமைக்கப்படவில்லை என்பதையும் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

அதன் அடிப்படையில் கடந்த 2 ஆம் திகதி முழங்காவிலில் திருத்தி அமைக்கப்பட்ட கமநல சேவை நிலையத்தின் திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பிரதியமைச்சர் சந்திரசேன நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் அக்கராயன் பகுதியில் கமநலசேவை கட்டடத்தின் அவசியம் குறித்து தெரிவித்ததோடு அதற்கான நிதி ஒதுக்கப்பட வேண்டும் எனவும் கேட்டிருந்தார்.

அதற்கமைவாக கமநல அபிவிருத்தி அமைச்சினூடாக சுமார் ஒன்பது மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்த பிரதியமைச்சர் சந்திரசேன தெரிவித்துள்ளார். இந்நிதியினூடாக துரிதகதியில் கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (29)

# மதுபோதையில் சாரதி; மயிரிழையில் தப்பினர் பயணிகள்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் காணப்பட்ட பயணிகள் பஸ்வண்டியின் சாரதியின் நடவடிக்கை காரணமாக பயணிகள் பலர் நடுத்தெருவில் அந்தரித்த சம்பவம் ஒன்று நேற்று யாழ். மானிப்பாய் வீதியில் இடம்பெற்றிருக்கிறது.

யாழ். நகரிலிருந்து நேற்று மாலை கீரிமலை நோக்கி சென்றுகொண்டிருந்த 788 வழி இலக்க பஸ்வண்டியின் சாரதி பண்வண்டியை தடுமாற்றத்துடன் நிதானமிழந்த நிலையில் செலுத்துவதை பயணிகள் சிலர் உணர்ந்துகொண்டனர்.

எனினும் அவரை பலர் கண்காணித்துக் கொண்டு வந்தனர். இரு தடவைகள் வேறு வாகனத்துடன் மோதும் நிலை மயிரிழையில் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

எனினும் ஆறுகால்மடம் பகுதியில் உள்ள வீதி வளைவுக்கருகில் சென்றதும் அவர் முற்றாக செயலிழந்து விடவே பஸ்வண்டி கட்டுப்பாட்டை இழந்து பயணித்து பெரும் விபத்து ஏற்படவிருந்த சமயம் பயணிகள் விழிப்படைந்து பஸ்வண்டியை நிறுத்தி அனைவரும் இறங்கி வேறு பஸ்சில் ஏறி பயணத்தை தொடர்ந்தனர்.

# மாற்றுத்திறனாளிகளுக்கான வடமாகாண ஒன்றியம் அமைப்பு

(திருநெல்வேலி)

மாற்றுவலுவுடையோருக்கான வடமாகாண மாற்றுத்திறனாளிகளுக்கான அமைப்புக்களின் ஒன்றியம் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் தலைவராக செ.சுப்பிரமணியம், செயலாளராக அருட் சகோதரர் ஜொசபின், பொருளாளராக கே.சுகுணன் ஆகியோரும் ஒன்பது அங்கத்தவர்களைக் கொண்ட நிறைவேற்றுக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இவ்ஒன்றிய அங்குரார்ப்பண நிகழ்வில் மாற்றுத்திறனாளிகள் அமைப்புக்களான சீட்ஸ், ஓகான், கருவி, பெதஸ்டா விஷன், இனிய வாழ்வு இல்லம், அறோட், மாடம, நாறோ, யாழ் மற்றும் வன்னி விழிப்புலனற்றோர் சங்கம், யுனொக்கா, சோஆ போன்றவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

வடமாகாணத்திலுள்ள மாற்றுத்திறனாளிகளின் அமைப்புக்கள் அனைத்தும் இவ் ஒன்றியத்தில் இணைந்து கொள்வதன் மூலம் இவர்களுக்கான தேவைகள், அடிப்படை வசதிகள் மற்றும் இதர சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை பெற்றுக்கொள்ள முடியும் என ஒன்றியத்தின் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (137)

# பொன்சேகாவின் தீப்பந்தம் அணைந்துவிட்டது

## தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கிண்டல்

வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களுக்கு நடத்தப்பட்ட தேர்தலின் பின்னர் சரத் பொன்சேகா தனது ஜனநாயகக் கட்சியின் சின்னமான தீப்பந்தத்தை அணைத்து பின்னால் மறைத்து கொண்டதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் முன்னாள் தென் மாகாண சபை உறுப்பினர் ரத்ன கமகே, அம்பீமன பிரதேசத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் இதனை கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சரத் பொன்சேகா சிறையில் இருந்த போது அவரை காப்பற்ற வராதவர்கள் இன்று பொன்சேகாவின் கட்சியின் ஊடாக தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் தீப்பந்தத்திற்கு மக்கள் வாக்களித்து தீப்பற்ற போகிறது என்று நினைத்தனர்.

ஆனால் என்ன நடந்தது, தேர்தலுக்கு பின்னர் தீப்பந்தத்தை அணைத்து பின்னால் மறைத்துக் கொண்டார்.

மாகாண சபையில் உண்மையான மக்களின் குரலை எழுப்பவில்லை. பொன்சேகாவின் தீப்பந்தம் தற்போது அணைந்துவிட்டது என்றார்.

# மியான்மர் செல்ல மகிந்த திட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்த மாத முற்பகுதியில் மியான்மருக்கு அதிகாரபூர்வ பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், மியான்மர் அங்கம் வகிக்காததால், இந்தப் பயணம் ஜெனிவா தீர்மானத்துக்கு எதிராக ஆதரவு திரட்டும் நோக்கம் கொண்டதல்ல என்றும் கூறப்படுகிறது.

# ஜனாதிபதி பிரித்தானியா செல்கிறார்; அடுத்த மாதம் முதல் வாரத்தில்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்த மாதம் பிரித்தானியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

வரும் மார்ச் 10 ஆம் திகதி லண்டனில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் தின நிகழ்வுகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமை வகிக்கவுள்ளார்.

கொமன்வெல்த் தினத்தை முன்னிட்டு, வெஸ்ட்மினிஸ்டர் அபேயில், ஒரு மணிநேர பிரார்த்தனை இடம்பெறவுள்ளது.

இதில் பிரித்தானிய மகாராணி இரண்டாவது எலிசபெத், கொமன்வெல்த் அமைப்பின் தலைமைப் பதவியை வகிக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, மூத்த அரசியல்வாதிகள், உயர் ஆணையர்கள், கொமன்வெல்த் பிரதிநிதிகள் என சுமார் 200 முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக கொமன்வெல்த் செயலகம் தெரிவித்துள்ளது.

# வியாபார வரி உரிமத்தை பெற்றுக்கொள்ள காலக்கெடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைக்குட்பட்ட அனைத்து வியாபார நிறுவனங்களும் தங்கள் நிறுவனத்திற்குரிய வியாபார வரியையும் வியாபார உரிமத்தையும் எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பதாக யாழ். மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் செலுத்தி வியாபார உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை பிரதம இறைவரிப் பரிசோதகர் கா.ஜெயராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு செலுத்தத் தவறியவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே வியாபார வரிக் கட்டணம் செலுத்தாதோர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வியாபார வரி அறவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் எழுத்துமூல விளக்கமளிப்பு

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலைக் குற்றவாளிகளான பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் எழுத்து மூலமான விளக்கம் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோர் தங்களுடைய மரண தண்டனையை இரத்து செய்ய வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செயதுள்ளனர்.

இது தொடர்பான விசாரணை நடைபெற்று வருகிறது. இந்நிலையில், முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரது மரண தண்டனையை குறைக்க மத்திய அரசு எதிர்ப்புத் தெரிவித்தது.

தற்போது ராஜீவ் கொலை வழக்கு கைதிகளான சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரின் வாதம் எழுத்துபூர்வமாக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிறையில் தாங்கள் மகிழ்ச்சியாக இருந்ததாக கூறப்படுவதில் உண்மையில்லை என்று கூறியுள்ள அவர்கள், தங்களின் கருணை மனு 15 ஆண்டுகள் கழித்து நிராகரிக்கப்படுவதில் அரசியல் உள்நோக்கம் உள்ளது என்றும் அந்த வாதத்தில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 பெப்ரவரி 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.